பக்கங்கள்-16 25,ஐப்பசி.2020 விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.

T.P- 0770457661

மலர்-01 Tel&Fax- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -318





## சிங்கள பேரினவாதிகளின் பிடியில் 20ஆவது திருத்தச்சட்டம் - நடந்தது என்ன?



## ஆசிய, ஐரோப்பிய வல்லரசுகளின் விளையாட்டு மைதானமாகிய இலங்கை



## ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் வழியில் சர்வாதிகாரிகள்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# சிங்களப் பேரினவாதிகளின் பிடியில் 20 ஆவது திருத்தச் சட்டம் – நடந்தது என்ன?




**"20" நாட்டுக்கு நன்மை தருமா? சட்டவல்லுநர்கள் கூறுவது என்ன?**

அரசியலமைப்பின் 20 வது திருத்தம் தற்போது இலங்கை அரசியலில் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள விவகாரமாக உள்ளது. இந்த திருத்தம் குறித்து பல்வேறு தரப்பினரும் சாதக பாதக கருத்துக்களை முன்வைத்து வரும் நிலையில் இலங்கையின் சட்டத்துறையில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற சட்டவல்லுநர்கள் இந்த உத்தேச இருபதாவது அரசியலமைப்பு திருத்தம் குறித்து.

**கணக்காய்வு அபிவிருத்திக்கு தடையா? சட்டத்தரணி உந்துல் பிரேமரத்ன**

20வது திருத்தம் தொடர்பில் பேசும் போது நாட்டின் அபிவிருத்தியினை துரிதப்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த திருத்தம் முன்வைக்கப்படுகின்றது என்று அரசாங்கம் கூறியிருந்தது. ஆனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தத்தின் வரைவுப் பிரதியினைப் பார்க்கும் போது அரசாங்கம் முன்வைத்த விடயங்கள் எதுவும் அதில் இல்லை என்றே கூற வேண்டியுள்ளது. திருத்தம் குறித்து அரசாங்கம் முன்வைக்கும் கருத்துக்களும், அதில் உள்ள விடயங்களும் முற்றிலும் வேறுபட்டுள்ளது. உதாரணமாக நாட்டை அபிவிருத்தி செய்ய கணக்காய்வு தொடர்பான சட்டத்தினை பலவீனப்படுத்த தேவையில்லை. அத்துடன் கணக்காய்வு செயற்பாடுகளையும் பலவீனப்படுத்த தேவையில்லை தானே?

19வது திருத்தத்தினூடாக உருவாக்கப்பட்ட ஒப்பீட்டளவிலான ஜனநாயகக் கட்டமைப்புகளின் அழுத்தங்கள் இன்னும் சில காலங்களின் பின்பு பல்வேறு மட்டங்களில் செல்வாக்கு செலுத்தியிருக்கும். ஆனால் 20வது திருத்தம் முழுமையாக அதிகாரத்தினை தனி ஒருவருக்கு வழங்கவே முயற்சிக்கின்றது. நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் நிலவிய அராஜகமான பின்னணி, தீவிரவாத தாக்குதல் என்பனவற்றை முன்வைத்தே இந்த திருத்தம் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் 19வது திருத்தம் காரணமாக நல்லாட்சி அரசாங்கத்தில் பிரச்சினைகள் ஏற்படவில்லை. பிரதமரும் ஜனாதிபதியும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தமையே எப்பொழுதுமே பிரச்சினைக்கு உரிய முக்கியமான காரணமாக இருந்தது. சந்திரிகா – ரணில் அரசாங்கத்திலும் இவ்வாறான பிரச்சினை தொடர்ந்து இருந்தது. இந்நிலையில், 20வது திருத்தத்தின் பின்பு எவரின் கரங்களில் அரசாங்க அதிகாரம் சென்றாலும் அராஜக நிலை ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளது.

ஜனாதிபதி நியமனம் தொடர்பான வயது எல்லை குறைக்கப்படுவதனூடாக நாட்டின் அபிவிருத்திக்கு நிகழப்போகும் நன்மை என்ன? கணக்காய்வினை பலவீனப்படுத்துவது நாட்டை முன்னேற்றுவதற்காகவா? கடந்த காலங்கள் முழுவதும் கணக்காய்வு திணைக்களத்திற்கு கிடைத்த சுயாதீனத்தன்மை காரணமாக நாட்டிற்குநன்மைவிளைந்ததேஒழிய பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை. உண்மையிலேயே கணக்காய்வு சம்பந்தமான விடயங்கள் எப்படி அபிவிருத்திக்கு தடையாக இருக்கும் என்பது பற்றி ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

**மோசமான பாதிப்பினை ஏற்படுத்தும். ஜனாதிபதி சட்டத்தரணி சுனில் லாங்காதிலக்க**

இந்த 20வது திருத்தம் 78ல் இருந்த அரசியலமைப்பினை நோக்கி நாட்டை கொண்டு செல்கின்றது என்று அனைவராலும் கூறப்படும் கருத்து உண்மை தான். இது மீண்டும் ஒரு சர்வாதிகாரியை உருவாக்கும் செயல் என்று தான் கூற வேண்டும். சுயாதீன ஆணைக்குழுக்களை ரத்து செய்கின்றமை மிகவும் மோசமான செயலாகும். அத்துடன் மக்களால் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் குறைக்கப்படுகின்றது என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டும் உண்மையானதே. இந்த செயற்பாடுகள் எம்மைப் போன்ற நாடுகளுக்கு மிகவும் மோசமான பாதிப்பினை ஏற்படுத்தும். பாராளுமன்ற அதிகாரம் முழுமையாக ஜனாதிபதி வசமானால் மக்களின் இறைமைக்கு ஏற்படப்போகும் கதி என்ன? சுயாதீன ஆணைக்குழுக்கள் இன்றி மக்களின் இறைமை என்பதும் இல்லை. எனவே எப்படிப் பார்த்தாலும் 20வது அரசியலமைப்பு திருத்தம் என்பது மிகவும் மோசமானது. 20வது திருத்தத்தினூடாக ஜனநாயகம் பாதுகாக்கப்படும் என்று கூறப்படுவதனை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

**42 ஆண்டுகள் கடந்தாயிற்று எங்கே அபிவிருத்தி? சட்டத்தரணி ஜயந்த தெஹிஅத்தகே**

நாட்டின் வேகமான வளர்ச்சிக்கு அனைத்து அதிகாரங்களும் உள்ள ஜனாதிபதி ஒருவரைக் கொண்ட அரசியலமைப்பு தேவை என்ற காரணத்தினை முன்வைத்தே 1978ம் ஆண்டு அரசியலமைப்பு முன்வைக்கப்பட்டது. இதே கருத்தினையே 1965ல் ஜே.ஆர்.ஜெயவர்தன ஒரு பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாக முன்வைத்திருந்தார். அந்த சமயத்தில் டட்லி சேனாநாயக்க போன்ற ஐ.தே.க தலைவர்கள் அக்கருத்துடன் உடன்படவில்லை. ஆயினும் ஜே.ஆர் 1978ம் ஆண்டு அவ்வாறானதொரு அரசியலமைப்பினையே உருவாக்கினார். ஆனால் 42 ஆண்டுகள் கடந்தாயிற்று. எங்கே அந்த அபிவிருத்தி? 2015ல் தான் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு ஓரளவு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஒரு சிலர் பௌதீக ரீதியில் கட்டிடங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் அபிவிருத்தி ஏற்பட்டதாக குறிப்பிடுகின்றனர். ஆனால் மக்களின் வாழ்வில் அபிவிருத்தி இதுவரை ஏற்படவில்லை. 42 ஆண்டுகள் நாட்டில் எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்படாத நிலையில் நாங்கள் ஏன் அவ்வாறான ஓர் அரசியலமைப்பு முறையை தொடர்ச்சியாகப் பின்பற்றிக் கொண்டிருக்க வேண்டும்? 19வது திருத்தத்தில் உண்மையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பறிக்கப்படவில்லை. மாறாக அவரின் அதிகாரங்களைக் கண்காணிக்கும்பொறிமுறைஒன்றே உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் 1978ல் ஜே.ஆர் கொண்டு வந்த விடயங்கள் சிற்சில மாற்றங்களுடன் அவ்வாறே இப்பொழுதும் பின்பற்றப்படுகின்றது. ஜே.ஆருக்காக அன்று 1978ம் ஆண்டு அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டது. 20ம் திருத்தம் இன்று ஜே.ஆருக்காக கொண்டு வரப்படுகின்றது என்று கூறினால் அது மிகையில்லை. ஆனால் அரசியலமைப்பு திருத்தம் என்பது பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் நலனைக் கருதியதாக இருக்கக்கூடாது. மக்களுக்காக கொண்டு வரப்படவேண்டும். எமது நாட்டின் அரசியல் அமைப்பு திருத்த வரலாற்றின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஏதோ ஒரு உள்நோக்கம் பின்னணியில் செல்வாக்கு செலுத்தியிருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும்.

**மூன்று விடயங்கள் தொடர்பில் கடும் எதிர்ப்பு. ஜனாதிபதி சட்டத்தரணி பிரசன்ன லால் த சில்வா**

ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்களுள் நானும் ஒருவர். இதன்படி தற்போதைய அரசியலமைப்பில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் அவ்வாறே இருக்கவேண்டும் என்று நான் கருதுகின்றேன். சர்வதேச அழுத்தங்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டியது அவசியமான விடயம். தேசியவாத கட்சிகள் நாட்டில் இருக்கின்ற பின்னணியில் எமது தலைவர்கள் சதுரங்க காய்களைப் போன்று அரசியல் சதுரங்க நகர்வுகளில் மாட்டிக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் அதி கம் உள்ளன. பொதுபல சேனா மற்றும் ஹெல உறுமய உட்பட இனங்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் கட்சிகளும், அமைப்பு களும் நாட்டின் ஆட்சி அதிகாரத்தின் மீது எப்படியோ செல்வாக்கு செலுத்திக்கொண்டு தான் இருக்கின்றன. இதனால் தான் இவ்வாறு இனங்களை முன்னிலைப்படுத்தும் கட்சிகளை இரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளேன். இவ்வாறான பின்னணியில் தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை எமது நாட்டில் இருக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன்.எனினும்எந்தவொரு அரசியலமைப்பினை உருவாக்கும் போதும் நாட்டின் ஸ்திரத்தன்மையை ஒரு புறம் பாதுகாக்கும் அதே வேளை, நாட்டின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவும் வேண்டும். அதேநேரம் அவை இரண்டுக்கும் இடையில் ஓர் சம நிலையான தன்மை பேணப்படல் வேண்டும். அவ்வாறானதொரு அரசியலமைப்பு தான் நல்லது என்று நான் கருதுகின்றேன். ஆனால் இந்த திருத்தத்தினூடாக அரசின் உயர் பதவிகளுக்கு இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் வருவதனை நான் எதிர்க்கின்றேன். அத்துடன் ஜனாதிபதியின் தீர்மானத்தினை அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்து கேள்விக்குட்படுத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள வரன்முறைகளையும் நான் எதிர்க்கின்றேன். கணக்காய்வுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டதற்கும் நான் எதிர்ப்பு தெரிவிக்கின்றேன். எனது அபிப்பிராயத்தின்படி பூட்டான் நாட்டில் உள்ளது போன்றதொரு அரசியலமைப்பினையே நாம் உருவாக்க வேண்டும். அந்நாடு மதச்சார்பில்லாத ஒரு நாடு. ஆனால் அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது பௌத்த தத்துவத்திற்கு ஏற்ப அரசியலமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அனைவரினதும் கருத்துக்களைக் கேட்டறிந்து, பொறுமையாகவும், நீண்டகால கலந்துரையாடல்களின்பின்புநாமும் நமக்கு பொறுத்தமான அரசியலமைப்பினை உருவாக்க வேண்டும். பூட்டான் அரசியலமைப்பினை உருவாக்க ஆறு ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளது. அத்துடன் தனிப்பட்ட நோக்கங்களுக்காக அரசியலமைப்பினை உருவாக்கக் கூடாது. ஜே.ஆர் தனது தனிப்பட்ட தேவைகளுக்காக 1978ம் ஆண்டு அரசியலமைப்பினை உருவாக்கினார். அதன் எதிர்விளைவாக தான் அதற்கு பின்னரான அனைத்து திருத்தங்களும் முன்வைக்கப்பட்டன. அவ்வாறில்லாமல் இந்தியா மற்றும் பூட்டானைப் போன்று நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடிய அரசியலமைப்பே எமது நாட்டிற்கு அவசியமாகும்.

**பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு இல்லை. சட்டத்தரணி நெவில் கருணாரத்ன**

தற்போது ஆளும் கட்சிக்கு அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டுவருவதற்கான அதிகாரம் உள்ளது என்பது உண்மையாயினும், இப்பொழுது நாட்டின் தேவை என்ன என்பதனை சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது. தற்போது நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி நிலை காணப்படுகின்றது. அதற்கான தீர்வு 20வது அரசியலமைப்பு திருத்தத்தில் இல்லை. நாட்டின் நாலாபுறங்களிலும் இருந்து பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. நல்லாட்சி காலத்திலும் இவ்வாறான கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டிருந்தன.

08ஆம் பக்கம் பார்க்க...

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

# கொரோனா வைரசும், 20ஆவது திருத்தச்சட்டமும்

கொரோனா வைரஸின் பாதிப்பினால் உலக நாடுகள் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவரும் இந்நிலையில், இலங்கையில் திடீரென கொரோனா வைரசின் தாக்கம் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாகவிருக்கிறது. மிகவும் வேகமாக இவ் கிருமி பரவி வருவதையும், தென்னிலங்கையில் பல பிரதேசங்களுக்கு ஊரடங்கு உத்தரவுகளும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. நாட்டு மக்களை மிகக் கவனமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தியவண்ணம் உள்ளனர். மக்கள் இவ் வைரஸ் தாக்கத்தின் காரணமாக மன உளைச்சலுக்கும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். வீட்டைவிட்டு வெளியில் தேவைகளுக்காகக் கூட செல்வதற்கு அஞ்சுகின்ற நிலையில் தான், அரசு இவ்வைரசைக் கட்டுப்படுத்துவதில் தீவிரமாகச் செயற்படுகின்றோம் எனக்கூறிக்கொண்டு பாராளுமன்றில் சூட்டோடு சூட்டாக 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் மேற்பட்ட வாக்குகளால் நிறைவேற்றியுள்ளது. இவ் அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த '20' இல் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு, அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று ஓராண்டு முடிவடைந்த பின்னர் பாராளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் நான்கரை வருடங்கள் முடிவடைந்த பின்னரே ஜனாதிபதியால் பாராளுமன்றத்தைக் கலைக்கமுடியும் என்ற நிலை காணப்பட்டது. 19 வருவதற்கு முன்னர் ஒன்றரை வருடங்களுக்கு பின்னர் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதி காரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. தற்போது அது ஓராண்டாக குறைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆ கவும் இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை 40 ஆ கவும் இருக்கவேண்டும் என்ற வரையறை நீக்கப்பட்டுள்ளது. இதன்படி தமக்கு தேவையான விதத்தில் அமைச்சர்களை நியமிப்பதற்கான வாய்ப்பு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு கிட்டும். அதுமட்டுமல்ல பிரதமர் மற்றும் அமைச்சர்கள் பதவி நீக்குவதற்கும், எந்தவொரு அமைச்சையும் தனக்குகீழ் கொண்டுவருவதற்கான அதிகாரமும் ஜனாதிபதி யின் கைகளுக்குள் சென்றடையும். 19 அமுலுக்கு வருவதற்கு முன்னரும் இதே நிலைமை காணப்பட்டது.

இரட்டை குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது, பாராளுமன்றம் வரவும் முடியாது என்ற நடைமுறையும் 20 ஊடாக நீக்கப்படும். உயர் பதவிகளுக்கான நியமனங்களை வழங்கும் அரசியலமைப்பு பேரவை நீக்கப்பட்டு, பாராளுமன்ற பேரவை என்ற விடயம் முன்வைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு பேரவையில் 7 பாராளுமன்ற உறுப்பினர்களும், மூன்று சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும், பாராளுமன்ற பேரவையில் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு கதவடைப்பு செய்யப்பட்டுள்ளது. உயர்நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைத்துள்ளது. பாராளுமன்ற பேரவையில் 5 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கலாம். (பிரதம அமைச்சர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரின் பிரதிநிதி, எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதி.) ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வயதெல்லை 35 இலிருந்து 30 ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பதவிகாலம் 5 ஆண்டு, இரண்டு தடவைகள் மாத்திரமே அந்த பதவியை வகிக்கலாம் என்ற 19 இன் ஏற்பாடு 20ஆவது திருத்தச்சட்டமூலத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இரண்டு சுயாதீன ஆணைக்குழுக்கள் நீக்கப்பட்டுள்ளன.( கணக்காய்வு சேவை ஆணைக்குழு, தேசிய பெறுமை ஆணைக்குழு) தேர்தல் ஆணைக்குழு உட்பட 19 இன் பிரகாரம் உருவாக்கப்பட்ட ஏனையவை அதேபோன்று தொடரும். தேர்தல் ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்யும் அதி காரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. தலைவரையும் அவரே நியமிக்கலாம். முப்படை தளபதிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரை ஜனாதிபதியே நியமிப்பார். இவைதான் 20இல் அடங்கியிருக்கின்ற விடயங்கள்.

இவ் வைரசின் தாக்கத்தினால் இன்று சமூகத்தில் பாதுகாப்பற்ற தன்மையும் பீதியும் ஏற்பட்டுள்ளது. சாதாரண மக்களும் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது. இதனால் மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டினுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. இந்நிலையில் அவசர அவசரமாக யாருடைய தேவைக்காக இந்த திருத்தச்சட்டம்?. தனி ஒருவரின் கைகளில் அதிகாரங்கள் குவிவது சரியா?, இதனால் ஜனாதிபதி சாதிக்கப்போவது என்ன? ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அவர்கள் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு எதைச் சாதித்தார்? இந்த நிறைவேற்று அதிகாரத்தினால் நாட்டு மக்கள் அடைந்த நன்மை என்ன? என்கிற கேள்விகள் அரசியல் அவதானிகள் மத்தியில் எழாமலில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

122

கடந்தவாரத் தொடர்ச்சி...



இவர்கள்கெரில்லாஇராணுவத்தில் பூரண நம்பிக்கையுள்ளவர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர். சாத்திய மான மறைமுக வழிகளைக் கடைப்பிடித்து, இந்த முக்கியமான பொருட்களைப் பெண்களால் கொண்டுசெல்ல அல்லது இடம் மாற்ற முடியும். ஏனெனில், எவ்வளவு கொடூர முறையிலான அடக்குமுறை இருந்தாலும் எவ்வளவு கண்டிப்பாகத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டாலும் அடக்கு முறையாளர்கள் ஆண்களைவிடப் பெண்களிடம் எப்பொழுதும் பண்பாகவே அணுகுகின்றனர். இதனால் தான் பெண்ணால் குறித்த இடத்திற்குச் செய்தியைக் கொண்டுசெல்ல முடிகின்றதுடன், மிக முக்கியமான வேறு ஏதாவது பணிகளையும் நிறைவேற்ற முடிகின்றது.

தகவல்களை வாய்வழி மூலம் அல்லது எழுத்துருவில் பரிமாறுகின்ற சாதாரண தூத ராக இருந்துகொண்டு பெண் எப்பொழுதும் ஆண்களைவிடக் குறைந்தளவு ஆபத்தை எதிர்கொண்டு தனது பணியை நிறைவேற்றலாம். கெரில்லாக்கள் எப்பொழுதும் திகைப்புத் தாக்குதலை ஏற்படுத்தியவாறே தோன்றுவார்கள் என்பதனைத் தெரிந்துள்ள எதிரிப்படைச் சிப்பாய் பயத்தினால் அவனுக்கு முன்னே எதிர்கொள்கின்ற அவன் அறியாத ஒவ்வொருவனையும் கெரில்லா என நினைத்தே அணுகுகின்றான். ஆனால், பெண்களைக் கண்டால் அவனிடம் சந்தேகம் குறைந்தளவே எழுகின்றது. ஆனால் அமைதிக் காலத்தில் தாங்கள் செய்த வேலை களிலும் இக்காலப் பகுதிகளில் பெண்கள் ஈடுபடலாம்.

கடினமான கெரில்லா வாழ்வைக் கடைப்பிடிக்கின்ற போர் வீரனைப் பொறுத்தவரையில் சுவையாகத் தயாரிக்கப்பட்ட உணவுகளைப் பெற்றுக்கொள்வது மனதிற்கினிய விடயமாகும். (போர்க்காலத்தில் மிகக் கொடுமைப்படுத்தல்களில் ஒன்றாக சுவையற்ற, ஆறிய, கெட்ட உணவு விளக்குகின்றது). பெண் சமையற்காரி எப்பொழுதும் சுவையாகவே உணவு தயாரிக்கின்றாள். பெண்கள் பெரும் திருப்தியுடன் வெவ்வேறு வகையிலான வீட்டு வேலைகளைச் செய்கின்றனர். அத்துடன் இங்கே குறிப்பிட வேண்டிய அசட்டைத்தனத்தை வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் எப்பொழுதும் வேகமாக இந்த வேலையிலிருந்து தப்பி, சமர்ப் பணிகளை நிறைவேற்றவே துடிக்கின்றனர்.

மருத்துவப் பணியிலும் பெண்கள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றனர். பெண்களின் மருத்துவத் தாதியரின் அல்லது மருத்துவரின் மிக முக்கிய பண்பு யாதெனில் மென்மையான அணுகுதலாகும். இதுவே பின்வரும் சமயங்களில் அதாவது விழுப்புண்ணடைந்தவனுக்கு வசதி யும் பராமரிப்பும் மாத்திரம் அவசியம் தேவைப்படுகின்ற போதும் அவன் கொடூர வேதனையை அனுபவிக்கின்றபோதும் அவனைச் சுற்றவர ஆபத்திருக்கின்றநிலையில் அவன் கைகளால் ஆயுதத்தைத் தூக்க முடியாதபோதும் மிக முக்கியமாகும்.

கெரில்லாக்களின் சிறிய உற்பத்திச்சாலைகள் உருவாக் கப்பட்டபின், பெண்கள் அங்கேயும் தமது வேலைகளைச் செய்யலாம். அதுவும் குறிப்பாக, இராணுவ உபகரணப்பொருள் உற்பத்தியிலாகும். ஏனெ னில், தையல்வேலை - இது பெண்களின் பாரம்பரிய வேலை யாகும். சாதாரணத் தையல் இயந்திரத்தையும் சில மூலப் பொருட்களையும் கொண்டு பெண் கூடியளவு வேலையைச் செய்வாள்.

ஏனைய சகல உள்நாட்டு வேலை களிலும் ஆண்களுக்குப் பதிலாகப் பெண்களும் வேலை செய்யலாம். வீரர்கள் பற்றாக்குறையாக இருக்கின்ற பொழுதுகளில், இந்த வேலை அவளிடம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால், கெரில்லா வாழ்வில் இது அரிய நிகழ்வாகும். கெரில்லாப் படைப்பிரிவின் ஆளணியில் அங்கம் வகிக்கும் சகல ஆண்களும் பெண்களும் குறித்த தயார்ப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்க வேண்டும்.

தொடரும்...

நெற்றிப்பொறியன்

# ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் வழியில் சர்வாதிகாரிகள்



சர்வாதிகாரம்கொண்டஜனாதிபதி ஆட்சிமுறையே இலங்கைத் தீவில் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அவர்கள். அதன் பின்னரான ஆட்சியாளர்களைப் பொறுத்த வரையில், ஜே.ஆரின் கொள்கைகளை ஆதாரமாக எடுத்துக்கொண்டு அதிகாரங் களை துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். ஜனாதிபதி யின் அதிகாரங்களைப் பற்றிப் பார்க்கின்றபொழுது அவை என்ன கூறுகின்றன?

1947 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இலங்கையில் நடைமுறையில் இருந்ததும் மக்கள் வாழ்க்கையில் நன்கு பரீட்சயமானதுமான பாராளுமன்ற ஆட்சிமுறையை நீக்கிவிட்டு 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்பின் கீழ் நிர்வாக விடயங் களை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடே நிறைவேற்று ஜனாதிபதித்துவ ஆட்சி முறையாகும். 1947 முதல் 1977 ஆம் ஆண்டு வரை இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி நிலவியதால் நாட்டின் நிர்வாகம் உண்மை நிர்வாகம், நாம நிர்வாகம் என இரண்டாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. இவற் றில் பெயரளவு நிர்வாகியாகவே ஜனாதிபதி காணப்பட்டார்.

1972 ஆம் ஆண்டு அரசி யல் அமைப்பின் படி ஜனாதிபதி பிரதமரின் சொல்லுக்கும், செயலுக்கும் கட்டுப்பட்டு நடந்தமையினால் நாடு பொருளா தார ரீதியாக பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகக் கூறி ஐக்கிய தேசியக் கட்சியினர் சட்டதுறைக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக செயற்படக்கூடிய ஒருவரை நிறைவேற்றுத்துறைக்கு பொறுப்பாக நியமிக்க முன் வந்தனர். அவ்வாறு நியமிக்கப் பட்டவரே ஜனாதிபதியாவார்.

1947ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை நிர்வாக துறையானது சட்டத்துறையின் கெடுபிடிகளுக்கும் கட்டுப் பாட்டுக்கும் உட்பட்டே செயற்பட வேண்டியிருந்தது. எனவே இத்தகைய தன்மையை நீக்கி சட்டத்துறையின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாது தன்னிச்சையாக செயற்படக்கூடிய நிர்வாகத்துறையை ஏற்படுத்தும் முகமாக ஜனாதிபதித்துவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இது தொடர்பான ஏற்பாடுகள் அரசியலமைப்பில் 07ஆம் அத்தியாயத்தில் 30 - 41 வரையான உறுப்புரைகளில் இடம் பெற்றுள்ளன.

30 ஆம் உறுப்புரைகளில் இலங்கைக்கு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஒருவர் இருத்தல் வேண்டும் எனவும் அவரே ஆட்சித்துறையின் தலை வராகவும், அரசின் தலைவராக வும், முப்படைகளின் தளபதியாக வும் விளங்குவார் என்றும் இவர் 06 ஆண்டுகள் பதவி வகிக்கவென விகிதாசார பிரதிநிதித்துவத்தின் தனிமாற்று வாக்கு முறை மூலம் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படவேண்டும் என யாப்பு விதி கூறுகிறது.

**அரசியல் அமைப்பின் 31 ஆம் உறுப்புரையில் ஜனாதிபதிக்கு இருக்கவேண்டிய தகைமைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.**

இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். 30வயதைக்கடந்தவராக வேண்டும். இரண்டு தடவைகளுக்கு மேல் மக்களால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படாதவராக இருக்க வேண்டும்.
(இவ்விதி அரசியல் அமைப்பின் 18ஆம் சீர்திருத்தத்தினூடாக மாற்றியமைக்கப்பட்டது. இதன்படி ஒருவர் எத்தனை தடவை வேண்டுமானாலும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படலாம் என்கிற விடயம் மீண்டும் நல்லாட்சி காலத்தில் திருத்தம் செய்யப்பட்டது)

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின்தலைவராகவோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவராகவோ இருத்தல் வேண்டும். (பட்டியலில் வாக்காளராக தகுதி பெற்ற எவரும் ஜனாதிபதியாக போட்டியிடலாம்)

குற்றம் செய்ததற்கான தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும். புத்தி சுயாதீனம் உடையவராக இருத்தல் வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் அரசியல் கட்சி ஒன்றினூடாக போட்டியிட்டால் 50000ரூபாவையும், சுயேட்சையாகப் போட்டியிட்டால் 75000 ரூபாவை யும் கட்டுப்பணமாக செலுத்த வேண்டும்.

**ஜனாதிபதி தேர்தல் முறை (94ம் சரத்து)**

1978ஆம்ஆண்டுஅரசியலமைப்பின் படி ஜனாதிபதியானவர் மக்களால் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் தனிமாற்று வாக்குரிமையினூ டாக தெரிவு செய்யப்படுகின்றார். ஜனாதிபதி தேர்தலின் போது முழு இலங்கையும் ஒரே தேர்தல் தொகுதியாக கணிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறும்.

தேர்தலின் போது இருவர் மாத்திரம் போட்டியிட்டால் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு மட்டுமே வழங்கப்படும். மூவர் போட்டியிட்டால் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கும் ஒரு விருப்பு வாக்கும் வழங்கப்படும். மூன்று பேருக்கு மேல் போட்டியிட்டால் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கும் இரண்டு விருப்பு வாக்குகளும் வழங்கப்படும். தேர்தலில் வாக்காளர் தனது முத லாம் வாக்கினை மட்டும் வழங்கி விட்டு இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் மாத்திரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ள வாக்கு சீட்டானது வாக்கொன்றை அடையாளப்படுத்தாமை காரண மாக நிராகரிக்கப்படலாம்.

**ஜனாதிபதி தேர்தலின் போது பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொள்ளலாம்.**

01 என்ற இலக்கத்தினை அடை யாளமிடுவதன் மூலம் வேட்பாளர் ஒருவருக்கு தமது வாக்கினை அளிக்க முடியும், 02 என்ற இலக்கத்தை அடையாளமிடுவதன் ஊடாகதமது02ஆம்விருப்பினையும் 03 என்ற இலக்கத்தை அடையாள மிடுவதன் ஊடாக தமது 3 ஆம் விருப்பினையும் அளிக்க முடியும்.

வாக்காளர் ஒருவர் தமது வாக்கினை மாத்திரம் அளிக்க முனைவாராயின் வாக்குசீட்டில் புள்ளடியிட்டு (X) தமது வாக்கினை அளிக்க முடியும், வாக்கு சீட்டொன்றில் ஒரு வாக்காளன் அதிகப்படியான வாக்குகளை அளித்திருந்தால் அவ்வாக்கு சீட்டு நிராகரிக்கப்பட்டதாக கணிக்கப்படும், ஜனாதிபதி தேர்தலானது பதவியில் இருக்கும் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அல்லது பதவிக்காலம் முடிந்து இரண்டு மாதங்களுக்கு இடையில் நடத்தப்படலாம், வாக்கு கணிப்பீட்டின் போது 50.1% வாக்கை பெற்றவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

மூன்று வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடுகின்ற போது எவரும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாது போகலாம். அவ்வாறான வேளையில் வேட்பாளர்களுள் அதிகூடுதலான வாக்குகளைப் பெற்ற இருவர் மாத்திரம்போட்டிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஏனை யோர் போட்டியில் இருந்து நிராகரிக்கப்படுவர்.

நீக்கப்பட்டவர்களின் பட்டியலில் காணப்படுகின்ற இரண்டாம் விருப்பு வாக்குகள் வாக்குகணிப்பீட்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர் களின் வாக்குகளோடு சேர்த்து கொள்ளப்படும். அப்போது அறுதிப் பெரும்பான்மை பெறாத சந்தர்ப்பத்தில் நீக்கப்பட்டவர்களின் மூன்றாம் விருப்புத்தெரிவுகள் சேர்த்து கொள்ளப்படும். அப்போதும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் திருவுள சீட்டொன்றின் மூலமாக ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார். இதுவரை இலங்கையில் நடைபெற்ற தேர்தல்களில் முதல் வாக்கு கணிப்பீட்டிலேயே 1982 – 52.7, 1988 – 50.4, 1994 – 62.2, 1999 – 51.9, 2005 – 50.3, 2010 – 57.0, 2015 – 51.28, 2019 – 52.25 என்ற ரீதியில் வாக்குகளைப் பெற்று கொண்டமையினால் இரண்டாம் கட்ட வாக்கு கணிப்பீடுகள் எதுவும் நடைபெறவில்லை. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தமது பதவியை பொறுப்பேற்பார்.

**ஜனாதிபதி அதிகாரங்கள்**

1978ஆம் ஆண்டு யாப்பின் படி ஏற்படுத்தப்பட்ட ஜனாதிபதித்துவ ஆட்சி முறையானது தனி ஒரு நாட்டின் நிர்வாக அதிகாரங்களை ஒப்படைத்ததாக அமைகின்றது. இந்நிர்வாகத் துறையானது சட்டதுறையின் கெடுபிடிகளுக்கு அப்பாற்பட்ட தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் செயற்படக்கூடிய நிறைவேற்று அதிகாரத்தை உடையதாக காணப்படுகின்றது. நிறைவேற்று நிர்வாகி எனும் ரீதி யில் இவரின் அதிகாரங்கள் மேலோங்கியுள்ளன. ஜனாதிபதி நிர்வாகத்துக்கு பொறுப்பாக்கப் பட்டிருந்தாலும் அவர் சட்டம், நிர்வாகம், நீதி, பாதுகாப்பு என பல்துறை அதிகாரங்களை கொண்டவராக காணப்படுகின்றார்.

**சட்டதுறை அதிகாரங்கள்**

பாராளுமன்ற முதற் கூட்டத் தொட ரின் போது கொள்கை பிரகடன உரையை வாசித்தல். பாராளுமன்ற சடங்கு முறையான இருக்கைக்கு தலைமை தாங்குதல், பாராளுமன்ற உறுப்பினரல்லாவிட்டாலும்பாராளு மன்றத்திற்கு செல்லவும் உரையாற்றவும் தமது வேண்டுகோளை நிறைவேற்றித் தரும்படி கேட்டு கொள்ளவும் அதி காரம் உடையவராவார்.

பாராளுமன்ற வரப்பிரசாதங்கள் அனைத்தும் இவருக்கும் உரித்துடையதாகும், பாராளு மன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல் போன்ற அதிகாரம் காணப்படினும் பாராளுமன்றத்தைக் கலைக்கும் போது 70 சரத்தின் (அ,ஆ,இ,ஈ) ஆகிய உபபிரிவுகளை அனுசரித்தே இப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

தொடரும்...

**நெற்றிப்பொறியன்**

# வன்னி யுத்தத்தில் இரசாயன ஆயுதம்



தடை செய்யப்பட்ட ஆயுதங்களை வன்னியில் சிறிலங்கா இராணுவம் பாவித்துள்ளது என்கின்றதான குற்றச்சாட்டுக்கள் தற்பொழுது மீண்டும் எழ ஆரம்பித்துள்ளன. மனிதத்திற்கு எதிரானதென்று சர்வதேச மட்டத்தில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்கள் (chemical weapons) மற்றும் கிளஸ்டர் குண்டுகள் என்று அழைக்கப்படுகின்ற கொத்தனிக்குண்டுகள் (cluster bombs) போன்றனவற்றை விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தங்களின் பொழுது சிறிலங்காப் படைகள் பாவித்ததற்கான ஆதாரங்கள் சர்வதேச அமைப்புக்கள் உட்பட பல்வேறு தரப்பில் இருந்தும் தற்பொழுது எழ ஆரம்பித்துள்ளன.

வன்னியில் கிளஸ்டர் குண்டுகள் பாவிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் அலென் பொஸ்டன் தகவல் வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து, இந்த விடயம் தொடர்பான ஒரு விசாரணையை தாம் மேற்கொள்ள இருப்பதாக, கிளஸ்டர் குண்டுகளின் பாவனையைத் தடை செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அனைத்துலக அமைப்பான கிளஸ்டர் குண்டுகள் ஒழிப்புக் கூட்டணியின் பணிப்பாளர் லோறா சீஸ்மன் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனாலும் இந்த விவகாரம் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை. தமிழ் ஊடகங்களில் இந்த விடயம் பேசப்பட்ட அளவிற்கு சர்வதேச ஊடகங்களின் கவனத்திற்கு இது கொண்டு செல்லப்படவில்லை என்பது உலகத் தமிழர்களின் இராஜதந்திரச் செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் ஒரு பின்னடைவு என்றுதான் கூறவேண்டும்.

காலத்தின் தேவை இந்த தடை செய்யப்பட்ட ஆயுத விடயம் சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லப்படுவதற்கு சில முக்கிய தரப்புக்கள் தடையாக இருக்கின்றதோ என்கின்றதான சந்தேகம் தற்பொழுது ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசியல் மேடையில் மேற்குலகம் எதிர்பார்த்த ஏதோ ஒரு மாற்றம் நிகழ ஆரம்பித்திருப்பது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது சர்வதேச மட்டத்தில் இன்று மனித உரிமை பேசிக்கொண்டிருக்கின்ற குறிப்பிட்ட சில நாடுகள் இந்தக் கிளஸ்டர் குண்டுகளை பாவித்த குற்ற உணர்வு மற்றொரு காரணமாக இருக்கலாம். ஆனாலும் சிறிலங்கா தேசத்தின் உண்மையான முகத்தைத் தோலுரித்துக் காண்பிப்பதற்கு உலகத்தமிழர் கரங்களில் மேலதிகமாகக் கிடைத்துள்ள நல்லதொரு ஆதாரம் என்கின்ற வகையில் இந்த தடை செய்யப்பட்ட ஆயுத விவகாரத்தை நாம் முன்னுரிமை கொடுத்து நகர்த்திச் செல்வது காலத்தின் தேவையாக இருக்கின்றது. இந்த இராஜதந்திர நகர்வை எவ்வாறு மேற்கொள்வது, யார் அதனைச் செய்வது என்பது பற்றிப் பார்ப்பதற்கு முன்னால் சில முக்கிய விடயங்களை ஆராய்வது அவசியம் என்று நினைக்கின்றேன். இந்த தடை செய்யப்பட்ட ஆயுத விவகாரம் தொடர்பில் புலம்பெயர் தமிழர்கள்மத்தியில் சில கேள்விகள் இருக்கின்றன.

**உலகில் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் சிறிலங்காப் படைகள் வசம் இருப்பது உண்மையா?**

**அவற்றை சிறிலங்காப் படைகள் உண்மையிலேயே பாவித்ததா?**

**சர்வதேச மட்டத்தில் தடை செய்யப்பட்ட இந்தக் கிளஸ்டர் குண்டுகள் மற்றும் இரசாயன ஆயுதங்களை உலகம் எவ்வாறு பார்க்கின்றது?**

**இந்த ஆயுதங்களைப் பாவிப்பதற்கு சர்வதேச மட்டத்தில் என்னென்ன தடைகள் இருக்கின்றன?**

**கோட்டாவின் யுத்தத்தின் பொழுது வன்னியில் இந்தத் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை சிறிலங்காப் படைகள் பாவித்திருப்பது நிரூபிக்கப்பட்டால் எப்படியான நிர்ப்பந்தங்களை, நெருக்கடிகளை சிறிலங்கா அரசாங்கம் சந்திக்கவேண்டியிருக்கும்?**

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை முதலில் நாம் பார்ப்போம்.

**சிறிலங்காப் படைகள் வசம் இரசாயனக் குண்டுகள்?**

2001ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12ம் திகதி தென்னிலங்கை ஆங்கில ஊடகமொன்று சிறிலங்கா இராணுவத் தலைமையின் ஊழல் நடவடிக்கை ஒன்றினை அம்பலப்படுத்தியிருந்தது. தோலில் வைத்து இயக்கக்கூடிய இரசாயனக் குண்டுகளைச் செலுத்தக்கூடிய ஏவுகனைகளை (RPO-A Shmel infantry flamethrower) சிறிலங்கா இராணுவத்தினர் கொள்வனவு செய்திருந்ததாகவும், அதில் பாரிய அளவு பண மோசடி நடைபெற்றிருந்ததாகவும், அந்த ஊடகம் ஆதாரங்களுடன் செய்தி வெளியிட்டிருந்தது. சிறிலங்காப் படையினர் பெருமளவு இரசாயன ஆயுதங்களைக் கொள்வனது செய்திருந்த விடயம் இதன் மூலமே முதன் முதலில் வெளிவந்து மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அந்த நேரத்தில் சிறிலங்காவின் இராணுவத் தளபதியாக இருந்த லெப்.ஜெனரல் லயனல் பல்லேகல்ல (Lt.General Lionel Ballagalle) இந்த இரசாயன ஆயுதங்களை பெற்றதாகவும், லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் Gladstone Industrial Holdings என்ற நிறுவனத்தின் ஊடாகவே இந்த ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் அந்த ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. ரஷ்யாவின் டுலா என்ற இடத்தில் KBC Instrument Design Bureau என்ற நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட இந்த இரசாயன ஆயுதங்களை, உக்ரேனிடம் இருந்து சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்திருந்தது.

*1000* இரசாயனக் குண்டுகளை *2001*ம் ஆண்டு ஜூலை மாதம் *17*ம் திகதி சிறிலங்கா தனியானதொரு விமானம் மூலமாக இலங்கைக்குக் கொண்டு வந்திருந்தது என்பதை, அந்தத் தென் இலங்கை ஆங்கில ஊடகம் ஆதாரங்களுடன் நிரூபித்திருந்தது. RPO-A Shmel infantry flamethrower என்ற இந்த இரசாயனக் குண்டுகள், thermo baric வகையைச் சேர்ந்ததாகவும், பாதிக்கப்படுபவருக்கு பாரிய எரிகாயங்களை விளைவிக்கக் கூடியதாக உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

செச்னிய யுத்தத்தின் போது ரஷ்யா இந்த வகை இரசாயனக் குண்டுகளைப் பாவித்து, மனித உரிமைகள் அமைப்புக்களின் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியிருந்தது. இந்த வகை குண்டுகள் பொது மக்களுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தக்கூடியன என்று தெரிவித்து அமெரிக்கா இந்த வகைக் குண்டுகளை தடைசெய்துள்ளது.

இப்படிப்பட்ட இரசாயனக் குண்டுகளைசிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்துள்ளது என்ற செய்தி வெளியானதைத் தொடர்ந்து அந்த நேரத்தில் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. ரஷ்யாவைத் தவிர உலகம் முழுவதும் தடை செய்யப்பட்ட இந்த வகை இரசாயனக் குண்டுகளை, அதுவும் பெரும் எண்ணிக்கையில் சந்திரிக்கா அரசாங்கம் கொள்வனவு செய்தது, பெரிய பரபரப்புக்கு உள்ளானது.

ஊடகவியலாளர்கள் சிறிலங்கா இராணுவத்தை கேள்வி கேட்டுத் துளைத்துவிட்டார்கள்.

**சிறிலங்கா இராணுவத்தின் பதில்கள்:**

தாம் கொள்வனவு செய்தது இரசாயன ஆயுதமல்ல. அதிக சேதத்தை விளைவிக்கக்கூடியதான இரசாயனம் சிறிதளவு கலக்கப்பட்ட ஆயுதம் மட்டுமே அது என்று சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பல்லேகல்ல ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் பின்னர் வேறு வழியில்லாமல் உண்மையை ஒப்புக்கொண்டார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனத்திற்கு இது தொடர்பாக செவ்வி வழங்கிய அப்போதைய சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணரட்ட, 'உலகின் பல நாடுகளும் இரசாயன ஆயுதங்களைத் தமதாகக் கொண்டிருப்பதாகவும், சில நாடுகள் அணு ஆயுதங்களைக்கூட தம்மிடம் வைத்திருப்பதாகக் கூறி, தாம் இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது தவறல்ல' என்று நியாயப்படுத்தியிருந்தார்.

இந்த இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்து சிறிலங்கா இராணுவத்திற்கு வழங்கிய Glad stone Industrial holdings என்ற நிறுவனத்தின் பணிப்பாளர்களுள் ஒருவரான முன்னாள் சிறிலங்கா இராணுவ அதிகாரி லெப். கேணல் உபாலி கஜநாயக்க (Lt.Col.Upali Gajanayake) சர்வதேச செய்தி நிறுவனம்ஒன்றிற்கு கருத்துக்கூறும் பொழுது, 'சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்தது இரசாயன ஆயுதமே' என்று உறுதிப்படுத்தியிருந்தார்.

**புலிகளின் கண்டனம்:**

சிறிலங்கா இராணுவம் இரசாயனக் குண்டுகளைக் கொள்வனவு செய்தது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் கடுமையான கண்டனத்தை அந்த நேரத்தில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டிருந்தார்கள். *16.08.2001* அன்று விடுதலைப் புலிகள் வெளிட்ட கண்டனத்தில், சிறிலங்கா இராணுவத்தின் இரசாயன ஆயுதப் பாவனையை கட்டுப்படுத்துமாறு அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்ற நாடுகளிடம் கோரிக்கையும் முன்வைத்திருந்தார்கள். அந்த வருடத்தின் இறுதியில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, *2002* இல் சமாதானம்என்ற மாயை வந்ததைத் தொடர்ந்து, இந்த இரசாயன ஆயுத விவகாரம் அப்படியே மறக்கப்பட்டு விட்டிருந்தது. தொடர்ந்து மறைக்கப்பட்டும் விட்டது. ஆக ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது.

கடந்த *2001*ம் ஆண்டு முதல் சிறிலங்காப் படைகள் வசம் இரசாயன ஆயுதங்கள் இருக்கத்தான் செய்கின்றன என்கின்ற விடயம் தெளிவாகத் தெரிகின்றது.

**தொடரும்...**

**சுழியோடி**

# ஆசிய ஐரோப்பிய வல்லரசுகளின் விளையாட்டு மைதானம் ஆகிய இலங்கை



உலகில் ஐரோப்பிய ஆசியா வல்லரசுகளாக அமெரிக்கா. பிரித்தானியா. பிரான்ஸ். இந்தியா. சீனா போன்ற நாடுகள் விளங்குகின்றன. உலக வல்லரசுகளின் கட்டமைப்புகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. பிரித்தானியா. சீனா. இந்தியா போன்றன அதற்கு அடுத்த நிலைகளில் உள்ளன. இலங்கை போர்த்துக்கேய ஆதிக்கத்திலிருந்தும் அதற்கு முன்னரும் மிக முக்கியமான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடாக காணப்பட்டது. அதற்கு காரணம் இலங்கையின் இயற்கை துறைமுகம் மற்றும் இலங்கையில் விளையும் வாசனைத் திரவியங்கள் மற்றும் கனிய வளங்களும் ஆகும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுபட்ட இலங்கை சுதந்திரமடைந்தது தொடக்கம் ஏதோ ஒரு வகையில் இலங்கை இந்தியா. சீனா. அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கு தேவையான நாடாக உள்ளது. அதனை கையகப்படுத்த முடியாவிட்டாலும் அதனை தமது முழுக்கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க மேற்குறிப்பிடப்பட்டுள்ள வல்லரசுகள் தங்களுக்குள் முட்டி மோதிக்கொள்கின்றன.

1960 காலப் பகுதிகளில் இந்தியா - சீனா போரில் இந்தியா படுதோல்வி அடைந்த நிலையில் 1970களின் பின்னர் பாகிஸ்தானுடன் போர் புரிந்து பங்களாதேஷ் என்னும் நாடு உதயமாக இந்தியா காரணமாகஇருந்தது.சீனாவுடன் ஏற்பட்ட தோல்வியை இப்போரில் சமன் செய்தது இந்தியா. அப்பொழுது இந்தியப் பிரதமராக இரும்புப் பெண்மணியாக உலகில் வலம் வந்த இந்திரா காந்தி அவர்கள் இருந்தார். இலங்கை இந்தியாவுக்கு மிக அருகில் உள்ள நாடாக இருந்த பொழுதிலும் இலங்கையின் பிராந்திய நலன்களில் அவ்வளவாக இந்தியா தலையிடாமல் இருந்த காலம். அப்பொழுது இலங்கையின் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் காணப்பட்டார். அவர் தன்னிறைவு பொருளாதாரக் கொள்கையுடன் நாட்டில் ஆட்சி செய்து வந்தார். இக்கால கட்டங்களில் வந்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் பிரதம வேட்பாளர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்துவதாக தேர்தல் பரப்புரைகளில் கூறி அத்தேர்தலில் வெற்றி பெற்றார். அத்துடன் நிறைவேற்று அதிகார முறையினையும் கொண்டு வந்தார். இவர் தனது வெளிநாட்டு கொள்கையில் இந்தியாவை விட அமெரிக்கா. இஸ்ரேல். பிரித்தானியா போன்ற நாடுகளுடன் மிகுந்த நட்புறவை கொண்டு இருந்தார். இந்நிலையில் இலங்கையின் பிராந்திய நலன்களில் மூக்கை நுழைக்காமல் அமைதியாக இருந்த இந்தியா. இந்த செயற்பாட்டால் தனது நிலைப்பாட்டை மாற்றி அப்பொழுது இலங்கை அரசுக்கு எதிராக உள்நாட்டில் தமிழர் தரப்பு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்த பொழுது அதற்கு ஆதரவாகவும் பயிற்சிகளையும். ஆயுதங்களையும் இந்தியா வழங்கி ஊக்கப்படுத்தி. இலங்கையின் வெளிநாட்டு கொள்கையினை தமது பக்கம் திருப்ப இந்தியா தந்திரமான நடவடிக்கையில் ஈடுபட்டது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அமெரிக்கா. இஸ்ரேல் சார் நிலைப்பாட்டை முடக்கி தமது பக்கம் திருப்பி தனது பிராந்திய நலனுக்கு பயன்படுத்த இந்தியா முயற்சித்தது. அதில் அது கணிசமான வெற்றியையும் பெற்றது. அத்துடன் தனது வல்லாதிக்க தன்மையையும் இதில் பரீட்சித்துப் பார்த்தது. அது என்னவெனில் அப்பாவி தமிழ் மக்களுக்கு உதவுவதாக கூறி உணவுப் பொட்டலங்களை வான் வழியாக அத்துமீறி வந்து கொடுத்தது. அது மட்டுமல்லாமல் இலங்கை - இந்தியா ஒப்பந்தம் மூலமாக தனது இராணுவ வல்லாதிக்க படையை அமைதிப் படை என்னும் பெயரில் களமிறக்கி தனது சிற்றரசாக இலங்கையை உலக நாடுகளுக்கு காண்பிக்க முயற்சித்தது. அப்பொழுது இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் இலங்கையை தனது மாநிலமாக்கல் என்னும் கனவு நிறைவேறாமல் திரும்பி சென்றது ஓர் வரலாறு. இதன் பின்னர் இலங்கையின் மிகப்பலம் பொருந்திய முப்படை கட்டமைப்பை கொண்ட விடுதலைப்புலிகள் அமைப்பு உள்ள காலகட்டங்களில் கடல் வழியாக எந்த ஒரு வல்லாதிக்க ஊடுறுவலும் இடம்பெறவில்லை என்றே சொல்லலாம். அவ்வாறு கடலில் மிக பலம் பொருந்திய அமைப்பாக கடல் புலிகள் விளங்கினர். இக்காலகட்டங்களில் திருகோணமலையில் கடலுக்கு அப்பால் அமெரிக்க கப்பல் ஒன்று திருகோணமலை கடற்பரப்பில் இல்மனைற்று எடுப்பதற்காக வந்தபொழுது கடற்புலிகள் அதனைத் தடுத்து நிறுத்தினர். பிறிதொரு சமயத்தில் அமெரிக்க கப்பல் கடற்புலிகளினால் மூழ்கடிக்கப்பட்டதாக அப்பொழுது பேசப்பட்டது.

இவ்வாறு கடல் பாதுகாப்பு மிகவும் பலமாக இருந்தது. ஆனால் 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இலங்கை மீதான ஆதிக்கப் போட்டிகள் மிக வேகமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்து அவமானத்துடன் வெளியேறியதன் பின்னர் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாமல் சற்று ஒதுங்கி இருந்தது இந்தியா. 2002ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்ற புலிகள் - அரசு பேச்சுவார்த்தையில் கூட நோர்வே. ஜப்பான் போன்ற நாடுகள் மத்தியஸ்தம் வகிக்கும் பொழுது இந்தியா அமைதியாக இருந்தது. பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து இறுதிப்போர் ஆரம்பித்த பொழுது இலங்கை அரசு போருக்கான உதவிகளை இந்தியாவிடம் கேட்டபொழுது முதலில் மறுத்த இந்தியா தனது அருகில் உள்ள பகை நாடுகளான பாகிஸ்தான். சீனா போன்ற நாடுகள் இலங்கைக்கு போதியளவு உதவிகளை வழங்க முன்வந்ததையடுத்து தானும் உதவி செய்ய முடிவெடுத்தது. இதன் மூலம் முள்ளிவாய்க்கால் மண்ணில் அப்பாவி மக்களின் உயிரைப் பறித்து இரத்தம் தோய்ந்த கைகளுடன் இந்தியா இரண்டாவது முறையாகவும் தனது கோரமுகத்தை தமிழர்களுக்குக் காட்டியது. யுத்தத்தின் பின்னர் இலங்கையில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் வெளிநாட்டு கொள்கைகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இந்நிலையில் அப்போதைய காங்கிரஸ் கட்சி ஆட்சி வீழ்த்தப்பட்டு பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி ஏறியது. காங்கிரஸ் கட்சியுடன் இருந்த உறவு பாரதிய ஜனதா கட்சியுடன் மகிந்த அவர்களுக்கு இருக்கவில்லை. மகிந்த ராஜபக்ச அவர்கள் சீனா பக்கம் தனது கொள்கை நிலைப்பாட்டை மாற்றி சீனாவுடன் பெரும் நட்புறவாக காணப்பட்டார்.

இக்காலகட்டங்களில் பொருளாதார ரீதியாக பார்க்கும் பொழுது சீனா. அமெரிக்கா. ஜப்பான். இந்தியா போன்ற நாடுகளில் பெரும் போட்டி நிலவியது. சீனாவின் உற்பத்திகளும் சந்தைப் படுத்தலும் மிக அதிகமாக விஸ்வரூபம் எடுத்தது. அது மட்டுமல்லாமல் இராணுவ ரீதியாகவும். ஆயுத உற்பத்திகளிலும் மிகப்பெரும் பலம் பொருந்திய நாடாக மாறத் தொடங்கியது. இந்நிலையில் மகிந்த அவர்கள் சீனாவுடன் பல்வேறு பொருளாதார ரீதியான ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டார். பல அபிவிருத்தி திட்டங்களை இலங்கையில் மேற்கொள்ள மகிந்த ராஜபக்ச அவர்கள் அனுமதி அளித்தார். இதற்கு சீனாவின் நிறுவனங்களை இலங்கையில் நிறுவ அனுமதியளித்தார். அத்துடன் பல இடங்களை சீனாவுக்கு 100 வருடங்கள் குத்தகைக்கும் வழங்கி உள்ளார். இதற்கு இந்தியா. அமெரிக்கா போன்ற நாடுகள் மிகுந்த எதிர்பை தெரிவித்த நிலையில் சீனா தனது பொருளாதார இராணுவ வல்லாதிக்கத்தை நிலைநிறுத்த அடுத்த ஆட்டத்தை ஆரம்பித்தது. அதுதான் 2019ஆம் ஆண்டு உருவாக்கி உலகையே தலைகீழாக மாற்றிய கொரோனா என்னும் கொடிய வைரஸை உருவாக்கி அதனை உலக நாடுகளுக்கு பரவவிட்டது. மிகமிக இரகசியமாக உற்பத்தி செய்த இந்த வைரசானது சிறு தவறால் தனது நாட்டுக்குள்ளும் பரவியது. ஆனால் மிக விரைவில் அதனை கட்டுப்படுத்தி விட்டது. இன்று உலகின் மிகப்பெரும் வல்லரசான அமெரிக்காவில் இவ் வைரசால் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தும் பில்லியன் கணக்கான மக்கள் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டும் உள்ளனர். அமெரிக்கா மட்டுமன்றி பிரித்தானியா. பிரான்ஸ். ஸ்பெயின். இந்தியா உட்பட அரபு நாடுகளும் சிக்கித் திணறி வருகின்றனர். எமது அண்டைய நாடான இந்தியா ஒரு இலட்சத்துக்கு மேல் உயிரிழப்பை சந்தித்துள்ளது. பல இலட்சக்கணக்கானோர் நோய் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். கொரோனா வைரசால் சகல நாடுகளும் திணறி வரும் நிலையில் சீனா மிக அமைதியாக தனது பொருளாதார இராணுவ கட்டமைப்புக்களை பலப்படுத்தி வருகின்றது. அத்துடன் தனது மறைமுக சிற்றரசான இலங்கையையும் கொரோனா உயிரிழப்பிலிருந்து கணிசமான அளவு பாதுகாத்துள்ளது. நட்புறவு நாட்டுக்கு அப்பால் இலங்கையில் தனது 40% பொருளாதார நிலையங்களை சீனா நிறுவியுள்ளது. இதனால் இலங்கையை பாதுகாப்பது மிக அவசியமாகின்றது.

இந்நிலையில் கொரோனா வைரஸின் மூன்றாம் அலை ஆரம்பித்து விட்டதாக சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர். அண்மைக்காலமாக கொரோனா தொற்று வேகம் கட்டுப்பாட்டுக்குள் இருந்த நிலையில் அது மிக வேகமாக சமூக பரவலை தொட்டுள்ளது. கடந்த சில தினங்களாக நோய் தொற்றாளர்கள் அதிகரித்து காணப்படுகின்றனர். இந்நிலையில் சீனா பல பில்லியன் நிதியினை இலங்கைக்கு கொரோனா உதவியாக கடந்த சில தினங்களுக்கு முன்னர் வழங்கியுள்ளது. இது இந்தியாவை மிகவும் விசனத்துக்கு உள்ளாக்கியுள்ளது. அத்துடன் அமெரிக்காவையும் மிகுந்த கோபத்துக்கு ஆளாக்கியுள்ளது. இதன் விளைவுகளை இலங்கை தற்பொழுது மெதுவாக சந்திக்க தொடங்கியுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவின் 1987ஆம் ஆண்டு ஒப்பந்த பிரகாரம் 13ஆம் திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு மாகாணசபை முறை உருவாக்கப்பட்டது. சிறுபான்மை இன மக்களின் குறைந்தளவு அபிலாசைகளை தீர்க்கும் முகமாக இம் மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது 19ஆம் திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு 20ஆம் திருத்தச்சட்ட முறைமை கொண்டு வரப்பட்டால் அது 13ஆம் திருத்தச்சட்டத்தில்உள்ளபலவிடயங்களை கேள்விக்குறியாக்கும் நிலை வரலாம் என இந்தியா எண்ணுகின்றது. 20ஆம் திருத்தச்சட்டத்தை சிறுபான்மை இனமும் பெரும்பாலன சிங்கள கட்சிகளும் எதிர்த்து வருகின்ற நிலையில் இந்தியா இவ்விடயத்தை உன்னிப்பாக அவதானித்து வருகிறது. இலங்கை - சீனா உறவை கண்டு விசனமடைந்த இந்தியா. சில தினங்களுக்கு முன்னர் இலங்கை அரசுக்கு மிரட்டல் விடும் முகமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பை அழைத்துப் பேச முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக இந்திய பிரதமர் மோடி அவர்களுடன் பேச்சு வார்த்தைக்கு நேரம் ஒதுக்கும்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்தபொழுதும் செவி கொடாத இந்தியா தற்பொழுது தானாக முன்வந்து பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்குவதாக கூறுவதாவது தமிழ் தரப்பின் மீது கொண்ட பற்று இல்லை. மாறாக. தனது பிராந்திய நலனில் கொண்ட அக்கறையால் சீனாவின் இலங்கை மீதான செல்வாக்கை தடுக்கவும் இலங்கை அரசுக்கு ஓர் அழுத்தத்தை கொடுக்கவும் இந்தியா முயல்கின்றது என்பது தெட்டத்தெளிவாக புலனாகின்றது.

ஐ.நா சபையின் கூட்டத்தொடர் மிக விரைவில் இடம்பெறவிருக்கும் நிலையில் இலங்கை - சீனா உறவால் அதிருப்தி அடைந்துள்ள அமெரிக்கா இக் கூட்டத்தொடரில் இலங்கை அரசுக்கு எதிரான சிறியளவில் எதிர்ப்பினை வெளிப்படுத்தக்கூடும். இது தமிழர்கள் மீது அமெரிக்கா கொண்ட இரக்கத்தினால் அல்ல சீனா மீது கொண்ட வெறுப்பினாலும் இலங்கை மீது ஓர் அழுத்தத்தை கொண்டு வருவதற்காகவே என நம்பலாம். மிக பிந்திய செய்தியின்படி விடுதலைப்புலிகள் மீதான தடையை பிரித்தானிய நீதிமன்றம் நீக்கியுள்ளது. ஆனால் இரண்டு வாரங்களுக்குள் பிரித்தானிய அரசுதான் முடிவு செய்ய வேண்டும். விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்குவது உத்தியோகபூர்வமானது என்று. இதையும் அமெரிக்கா சரியாக பயன்படுத்தும் என நினைக்கலாம். எவ்வாறெனில் அமெரிக்காவின் சகல வழிகளிலும் உதவியான நாடு பிரித்தானியா. இலங்கையை அடிபணிய வைக்க அமெரிக்கா. பிரிட்டன் ஆகிய நாடுகள் விடுதலைப்புலிகளின் தடை விவகாரத்தை கையிலெடுக்கலாம். சீனாவை விட்டு தமது பக்கம் இலங்கையை திருப்ப இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம். ஒட்டு மொத்தத்தில் இலங்கையின் பொருளாதார இராஜதந்திர உறவினை முறிக்க அமெரிக்கா. சீனா. இந்தியா. பிரிட்டன் போன்ற வல்லரசுகள் இலங்கையை ஒரு விளையாட்டு மைதானமாக எடுத்துள்ளன. அந்த விளையாட்டில் சிறுபான்மை இனமாகிய தமிழ் - முஸ்லீம் தரப்பை பகடைக்காயாக்கி தமது பிராந்திய நலனுக்குப் பயன்படுத்த விளைகின்றனர். இதை தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் புரிந்து கொள்ள வேண்டும். சீனாவின் விஸ்வரூப வளர்ச்சியினால் தற்பொழுது மறைமுக சிற்றரசாக இருக்கும் இலங்கை. வரும் காலத்தில் சீனாவின் ஒரு மாறிலமாக மாறுவது திண்ணம்.

**தாயகத்தான்**

# ராஜபக்ஷக்கள் கூறும் ஒரே நாடு – ஒரே இனம் – ஒரே சட்டம்

கொரோனா தொற்றுக்கு சற்று முன்பாக அதாவது, நாடாளுமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னதாக ராஜபக்ஷக்களுக்கு நெருக்கமான ஊடக முதலாளி ஒருவர் என்னிடம் சொன்னார், "தேர்தல் காலம் வரையிலும் தான் அவர்கள் இப்படி தனிச் சிங்கள வாக்குகளை இலக்குவைத்து அரசியலைக் கொண்டு போவார்கள். தேர்தல் முடிந்ததும் அவர்கள் தங்களுடைய போக்கை மாற்றிக் கொள்வார்கள்" என்று.

நான் அவருக்குச் சொன்னேன் "தேர்தல் முடிந்ததும் பல்லினத் தன்மை மிக்க ஓர் இலங்கைத் தீவை கட்டியெழுப்புவதற்கான ஓர் அரசியல் கலாசாரத்தை அவர்கள் முன்னெடுப்பார்கள் என்று நம்புகிறீர்களா? அதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு, ஏனென்றால் ராஜபக்ஷக்கள் எப்பொழுதும் அவர்களுடைய சொந்த வெற்றிகளின் கைதிகளாகவே காணப்படுகிறார்கள். இம்முறையும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அவர்கள் தமது வெற்றிக்காக தூண்டி விட்ட சக்திகளின் கைதிகளாகவே இருப்பார்கள். அதிலிருந்து பின்வாங்கி பல்லினத் தன்மை மிக்க ஓர் இலங்கைத் தீவை கட்டியெழுப்புவது கடினமாக இருக்கும்." என்றேன்.

இப்பொழுது தேர்தல் முடிந்து விட்டது. தேர்தலுக்குப் பின்னரான நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால்ராஜபக்ஷக்கள்அவர்களுடைய வெற்றிகளின் கைதிகளாகவே இன்றுவரையிலும் காணப்படுகிறார்கள். அவர்கள் உருவாக்கிய அமைச்சரவையில் மொத்தம்30அமைச்சர்களில்ஒருவர் தான் தமிழர். ஒருவர் தான் முஸ்லிம். நாற்பது இணை அமைச்சர்களில் இரண்டு தமிழர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம் ஒருவரும் கிடையாது. இது இன விகிதாசாரத்துக்கு முற்றிலும் முரணான ஒரு அமைச்சரவை. தொகுத்துச் சொன்னால் இது ஒரு பல்லினத் தன்மை மிக்க அமைச்சரவை என்று கூறமுடியாது. பெருமளவுக்கு ஒற்றைப்படையான ஓர் அமைச்சரவை. அமைச்சரவை விடயத்தில் மட்டுமல்லாது அதற்குப் பின்னரும்அவர்கள்முன்னெடுக்கும் அரசியலைப் பொறுத்தவரை அவர்கள் பல்லினத்தன்மை மிக்க ஓர் இலங்கைத் தீவை கட்டி எழுப்புவார்களா என்று கேட்க வேண்டியிருக்கிறது.

ஒரு முஸ்லிமை நீதி அமைச்சராக நியமித்து இருக்கிறார்கள். ஆனால் அவர் ஒரு சுயாதீனமான நீதியமைச்சராக இயங்க முடியாது. முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு நீதியை முன்னெடுப்பதற்கு அவர்கள் ஒரு முஸ்லீமை அமைச்சராக்கி இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதாவது ஒரு முஸ்லிம் கதிர்காமர்?

சில நாட்களுக்கு முன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டில் மாடு கொல்லப்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதாவது இறைச்சிக்காக மாடு வெட்டுவது தடை செய்யப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அநாகரிக தர்மபாலவின் போதனைகளைப் பின்பற்றி அவ்வாறு இறைச்சிக்காக மாடு வெட்டுவதைத் தடுக்கப் போவதாக அவர் கூறியிருக்கிறார். இது தொடர்பாக இன்னமும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை.

புத்தர் இறைச்சிக்காக மாடு கொல்லப்படுவதைத் தடுக்கவில்லை. அவர் இறப்பதற்கு முன்பு கடைசியாக அருந்திய உணவு பன்றி இறைச்சிக் கறி என்று கூறப்படுகிறது. அந்த உணவை அவருக்கு நந்தன் என்று அழைக்கப்படும் இரும்பு வேலை செய்யும் ஒரு தொழிலாளி சமைத்து வழங்கினார். அந்த உணவை அருந்திய பின்பு புத்தருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதாகவும் அதன் தொடர்ச்சியாக அவர் பரிநிர்வாணம் அடைந்ததாகவும் ஒரு கதை உண்டு. இவ்வாறு நந்தன் கொடுத்த உணவு அவருக்கு தீங்காக மாறியது என்று யாரும் கருதக் கூடாது என்பதற்காக புத்தர் பின்வருமாறு கூறியிருக்கிறார் "எனது வாழ்நாளில் நான் அருந்திய இரண்டு உணவுகள் மகத்தானவை. ஒன்று சுஜாதை சமைத்துத் தந்த பாலமுது மற்றது நந்தன் சமைத்துத் தந்த பன்றிக்கறி" என்று. எனவே, புத்தர் எங்கேயும் புலால் உணவை நிராகரிக்கவில்லை. இதை இன்னும் திருத்தமாகச் சொன்னால் சனாதன மரபில் இருந்த புலால் உண்ணாமை என்ற ஒழுக்கத்தை புத்தர் உடைத்தார் என்பதே உண்மையாகும். ஆனால் இலங்கைத் தீவிலே புத்தரின் பெயரால் இறைச்சிக்காக மாடு வெட்டுவதை தடுக்கும் ஒரு நிலைமை வரப்போகிறதா?

இலங்கைத் தீவில் அதிகம் மாட்டிறைச்சியை நுகர்வது முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் தான் என்று ஒரு கணிப்பு உண்டு. எனினும் சில மாட்டு இறைச்சிக் கடைக்காரர்கள் தரும் தகவல்களின்படி தீபாவளிப் பண்டிகைக் காலங்களில் அதிகம் மாட்டிறைச்சி விற்கப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்துக்கள் மத்தியிலும் மாட்டு இறைச்சி நுகர்வு கணிசமான அளவுக்கு உண்டு. ஏனைய இறைச்சி வகைகளுடன் ஒப்பிடுகையில் மாட்டிறைச்சி மலிவானது என்ற ஒரு கருத்தும் உண்டு. தவிர இலங்கைத் தீவில் மாட்டு இறைச்சி வியாபாரத்தில் அதிகமாக ஈடுபடுவது முஸ்லிம்களே என்றும் ஒரு அவதானிப்பு உண்டு.

இந்நிலையில், இறைச்சிக்காக மாடு வெட்டுவதைத் தடுத்தால் அது நேரடியாக முஸ்லிம்வர்த்தகர்களின் வயிற்றில் அடிக்கும். அதேசமயம் அதை உண்பவர்களின் வயிற்றிலும் அடிக்கும். இவ்வாறு உள்நாட்டு மாட்டு இறைச்சி தடுக்கப்பட்டால் வெளிநாடுகளில் இருந்து மாட்டு இறைச்சியை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். அது ஹலால் செய்யப்பட்ட உணவாக இருக்குமா என்பதும் பிரச்சினைக்குரியது. எனவே, மாட்டிறைச்சியை நுகரும் முஸ்லிம்களைப் பொறுத்தவரை இது உணவுக்கு எதிரான போர்தான். ஒரு இனத்தை அவமதிப்பதற்கும் கீழ்மைப் படுத்துவதற்கும் இங்கு உணவு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகின்றதா? அது மட்டுமல்லாது பெரும்பாலான வெளிநாட்டுஉல்லாசப்பயணிகளும் மாட்டிறைச்சியை விரும்புவதுண்டு என்று அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்களுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட மாட்டு இறைச்சியைத்தான் சமைக்க வேண்டியிருக்கும்.

இவ்வாறு இறைச்சிக்காக மாட்டை வெட்டக்கூடாது என்று தடுத்தால் அது தனியே முஸ்லிம்களுக்கு எதிரானது மட்டுமல்ல. அதற்கும் அப்பால் அது இந்தியாவில்



உள்ள இந்துத்துவவாதிகளோடு கூட்டுச் சேர்வதாகவும் அமையும். இந்த விடயத்தில் இந்துத்துவவாதிகளுக்கு மகிழ்ச்சியூட்டும் சமிக்ஞைகளை அனுப்புவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா?

மாட்டிறைச்சி விடயத்தில் மட்டுமல்லாது ஜனாதிபதியின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் ஏற்கனவே உருவாக்கப்பட்ட விசேட செயலணிகளிலும் தமிழ் - முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு இடமில்லை. தேர்தலுக்கு முன்னதாக இந்த விடயத்தை டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். தமிழ் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பாக கவனம் எடுக்கப்படும் என்று அவருக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. அதை அவர் மக்களுக்கும் சொன்னார். ஆனால் தேர்தல் முடியும் வரை அது நடக்கவில்லை. தேர்தலுக்குப் பின்னரும் அது நடக்கவில்லை.

இந்நிலையில், அதற்குப் பொருத்தமான ஒருவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்குத் தெரிவித்தார். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள தொல்பொருளியல் நிபுணர்கள் அந்தச் செயலணியில் இணைவதற்குத் தயாராக இல்லை என்றும் அவர் சொன்னார். மேலும் இவ்வாறுதுறைசார் அறிஞர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவது என்பது ஒரு விதத்தில் ஆயுதப் போராட்டத்தின் விளைவுதான் என்றும் அவர் விமர்சித்தார்.

அவர் இவ்வாறு கூறிய சில நாட்களின் பின் மருத்துவ நிபுணரான முரளி வல்லிபுரநாதன் அந்தசெயலணியில் இணைவதற்கு தயார் என்று அறிவித்தார். தன்னோடு சேர்த்து ஒரு முஸ்லிம் பெண் அறிஞரையும் இணைத்துக் கொள்ளலாம் என்று அவர் சிபாரிசு செய்தார். இது விடயத்தில் அவர் நேரடியாகவே டக்ளஸ் தேவானந்தாவோடும் அவருடைய அமைச்சின் செயலாளரோடும் உரையாடியிருக்கிறார். தான் ஒரு மருத்துவராக இருந்தபோதிலும் அந்தச் செயலணியில் இணைவதற்கு தயார் என்றும் அவர் கூறுகிறார்.

மொத்தம் 11 பேர் கொண்ட செயலணியில் மூன்று பேர் மட்டுமே துறைசார் நிபுணர்கள் ஆகும். ஏனைய எட்டுப் பேரும் படைத்தரப்பு, காவல்துறை, மகாசங்கம் போன்றவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்தான். அந்த பதினொரு பேரில் ஒரு மருத்துவ நிபுணரும் உண்டு. எனவே தன்னையும் அதில் இணைத்துக் கொள்ளலாம் என்று முரளி வல்லிபுரநாதன் விண்ணப்பித்திருந்தார். அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆலோசிக்கப்படும் என்று அவருக்கு கூறப்பட்டிருக்கிறது. முடிவு இக்கட்டுரை பிரசுரிக்கப்படும் பொழுதோ அல்லது அதற்கு சற்று பின்னரோ தெரியவரலாம்.

முரளி வல்லிபுரநாதன் ஏற்கனவே சர்ச்சையில் சிக்கியவர். கொரோனா தொற்றுக் காலத்தில் அரசாங்கத்தின் தனிமைப்படுத்தல் நிலையங்களில்தான் குறுக்கு தொற்று அதிகம் ஏற்படுகிறது என்று விமர்சித்து அதன் மூலம் சர்ச்சைக்கு உள்ளானவர். அவருக்கு எதிராக மருத்துவ சங்கம் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. ஒரு பகுதி தமிழ் மருத்துவர்கள் அவரை ஆதரித்தார்கள். அதேசமயம் தென்னிலங்கையில் அவருக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன. இவ்வாறு துணிச்சலான ஒரு மருத்துவ நிபுணர் ஜனாதிபதியின் தொல்பொருட் செயலணியில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார். இதை ஜனாதிபதியின் செயலகம் எவ்வாறு அணுகப்போகிறது?

இன்னும் சில வாரங்களில் யாப்பின் இருபதாவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு விடும். அப்பொழுது ராஜபக்ஷக்களுக்கு அரசர்களுக்கு நிகரான பலம் கிடைத்துவிடும். வம்ச ஆட்சிக்கு இருந்த தடைகளும் நீங்கி விடும். இவ்வாறு அதிகரித்த நிறைவேற்று அதிகாரங்களை அடையப்போகும் ராஜபக்ஷக்கள் சிறிய தேசிய இனங்கள் தொடர்பாக சகிப்புத் தன்மையோடு நடந்துகொள்ள மாட்டார்கள் என்பதைத்தான் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான நிலைமைகள், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான நிலைமைகளும் காட்டுகின்றன.

சில சமயம் அவர்களுடைய தமிழ் நண்பர்கள் மேலும் ஒன்றைக் கூறக்கூடும். அதாவது "நடக்கவிருக்கும் மாகாணசபைத் தேர்தல் வரையிலும் அவர்கள் இவ்வாறுதான் காணப்படுவார்கள். அந்தத் தேர்தலிலும் இன அலை ஒன்றை உற்பத்திசெய்து பெரும்பாலான மாகாண சபைகளைக் கைப்பற்றிய பின் சில சமயம் அவர்கள் பல்லினத் தன்மை மிக்க இலங்கைத் தீவை கட்டியெழுப்பக்கூடும்" என்று. ஆனால், இன அலையை எழுப்பி அதன் மூலம் மக்கள் ஆணையைப் பெற்றுவிட்டு அதிலிருந்து திரும்பிப்போக முடியாது என்பதே இலங்கைத் தீவின் கொடுமையான அரசியல் யதார்த்தமாகும். அது தான் ராஜபக்ஷக்கள் கூறும் ஒரே நாடு - ஒரே தேசம் - ஒரே இனம் - ஒரே சட்டம் ஆகும்.

**மறவன்**

# பிராந்தியச் செய்திகள்

## பல்கலைக்கழக பரீட்சைகள் இனி இணையவழி மூலம்

பல்கலைக்கழகங்களின் பரீட்சைகளை விரைவில் இணையவழி மூலம்(On line) நடத்துவதற்கான நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. இதுதொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவிக்கையில் இணையவழி பரீட்சைகளை நடத்துவதற்கான தினங்கள் இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என்றார்.

தற்சமயம் பல்கலைக்கழக கற்பித்தல் நடவடிக்கைகள் இணையவழி மூலம் இடம்பெற்று வருவதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் கூறினார்.

## மட்டக்களப்பில் சட்ட விரோத மதுபான நிலையம் முற்றுகை

*மதுபான போத்தல்களும் மீட்பு*

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு பகுதியில் நூதனமான முறையில் இயங்கிவந்த சட்ட விரோத மதுபான விற்பனை நிலையம்(வியாழக்கிழமை) இரவு பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டதுடன் அங்கிருந்து பெருமளவான மதுபான போத்தல்களும் மீட்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் போதையற்ற நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கமைவாக பொலிஸ் திணைக்களத்தினால் தொடர்ச்சியான சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதனடிப்படையில் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நளின் அசோக குணவர்த்தன தலைமையிலான பொலிஸார் தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதன்கீழ் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு பகுதியில் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 170 மில்லி லீற்றர் அளவுகொண்ட 750 மதுபான போத்தல்களும் பெரியளவிலான 48 மதுபான போத்தல்களும் மீட்கப்பட்டதுடன் இது தொடர்பில் மூன்று பெண்கள் உட்பட நான்கு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நளின் அசோக குணவர்தன தெரிவித்தார். கைதுசெய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## அத்தியாவசிய ஊழியர்கள் பயணிக்க தடையில்லை

*பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் DIG*

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலிலுள்ள இடங்களில் அத்தியாவசிய சேவை நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள், பயணங்களை மேற்கொள்வதில் தடையில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

மின்விநியோகம், நீர் வழங்கல், தொடர்பாடல் முதலான துறைகளைச் சேர்ந்தவர்கள், தமது கடமைக்குரிய அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி பயணம் செய்ய முடியுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார். கொழும்பு மாவட்டத்தின் ஐந்து பொலிஸ் பிரிவுகளில் (22) காலை தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொட்டாஞ்சேனை, மட்டக்குளி, முகத்துவாரம், புளுமெண்டல், கிராண்ட்பாஸ், வெல்லம்பிட்டி ஆகிய பொலிஸ் பிரிவுகளில் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கம்பஹா மாவட்டத்தின் 33 பொலிஸ் பிரிவுகளிலும், குருநாகல் மாவட்டத்தின் குளியாபிட்டி, கிரிஉல்ல, நாரம்மல, தும்மலசூரிய, பன்னல ஆகிய பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடர்ந்தும் அமுலிலுள்ளது.

## இலங்கையில் தீவிரம் அடையும் கொரோனா – 15வது கொரோனா மரணம் பதிவானது

இலங்கையில் 15வது கொரோனா மரணம் பதிவாகியுள்ளது. குளியாப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 56 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.
இதய நோய் தொடர்பில் பாதிக்கப்பட்டிருந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தீவிரம் அடைந்துள்ள நிலையில், 15ஆவது மரணம் பதிவாகி உள்ளது.



## கொவிட் 19க்கு பின்னரான வாழ்க்கை முறைக்கு வேலைத் திட்டம் அவசியம்

கொவிட் வைரசுடன் வாழும் தீர்மானங்களை அரசாங்கம் எடுத்துள்ளதால் எமது பாரம்பரிய வாழ்க்கை முறையிலிருந்து நாம் முழுமையாக மாற்றமடையும் கொவிட்டுக்கு பின்னரான வாழ்க்கைமுறையொன்றுக்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை கொவிட் வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள சுகாதார நெருக்கடிகள் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், கொவிட் 19 வைரஸ் முதலாம் அலையைவிட இரண்டாம் அலை தீவிரமடைந்துள்ளது. இதனால் சமூகத்தில் பாதுகாப்பற்ற தன்மையும் பீதியும் ஏற்பட்டுள்ளது. சாதாரண மக்களும் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது. இதனால் மக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கொவிட் ஒழிப்பு நடவடிக்கையில் நேரடியாக பணியாற்றும் சுகாதார ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்துள்ளனர்.

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்நிலையில் மக்களால் வழங்கப்பட்ட மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்தி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும். இந்த 20வது திருத்த வரைவுப்பிரதியின் மூலம் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடைக்கின்றது. ஆனால் அமைச்சர்களின் எண்ணிக்கையை குறைப்பதனையே முதலில் அரசாங்கம் செய்திருக்க வேண்டும். அமைச்சரவை விரிவாக்கம்என்பது தேவையற்றசெலவினத்தினை நாட்டிற்கு ஏற்படுத்துகின்றது. நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள இனப்பிரிவினை, மதப் பிரிவினை என்பன குறித்தும் அக்கறைக் காட்ட வேண்டியுள்ளது. அவற்றை தடுப்பதற்கு ஏற்றவாறான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்திருக்க வேண்டும்.

இதேவேளை, 20ஆவது அரசியலமைப்பு திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் மேற்பட்ட வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன. குழுநிலை விவாதத்தைத் தொடர்ந்து இடம்பெற்றவாக்கெடுப்பிலும், இரண்டாவதுவாசிப்பின்மீதானவாக்கெடுப்பில் கிடைத்த அதே எண்ணிக்கையிலான வாக்குகள் திருத்தத்திற்கு ஆதரவாகக் கிடைத்தன. ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவுடன், ஆளுந்தரப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனைத்தவிர, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் ஆகியோரும் திருத்தத்திற்கு ஆதரவளித்தனர். ஐக்கிய மக்கள் சக்தியின் இஷாக் ரஹ்மான், டயனா கமகே, எம்.எஸ். தௌபீக், பைசல் காசிம், எச்.எம்.எம் ஹாரிஸ், அ.அரவிந்தகுமார் ஆகியோரும் இருபதாவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இணைந்து ஐக்கிய முஸ்லிம் கூட்டணியில் தெரிவு செய்த அலி ஷப்ரி ரஹீமும் திருத்தத்திற்கு ஆதரவளித்தார். எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் உள்ளிட்டோர் திருத்தத்திற்கு எதிராக வாக்களித்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் திருத்தத்தை எதிர்த்து வாக்களித்தன.

குழு நிலை விவாதத்தின் போது, இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பிலான சரத்திற்கு தனியாக வாக்கெடுப்பு கோரப்பட்டது. 213 பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டிருந்தனர். அதன்படி ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் தற்போது அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த 20வது அரசியலமைப்பு திருத்தம் என்பது மக்களின் எதிர்பார்ப்பு அல்ல. அத்துடன் அவர்களால் கோரப்பட்டதும் அல்ல.




## மார்க்கெட் இழந்துவிட்டார் நடிகை சாய் பல்லவி!!

ப்ரேமம் படத்தின் மூலம் இளைஞர்களின் கனவு நாயகியாக மாறியவர் நடிகை சாய் பல்லவி. இதன்பின் தெலுங்கில் சில படங்களில் நடித்து வந்தார்.



தமிழில் ஏ.எல். விஜய் இயக்கத்தில் வெளியான தியா எனும் திரைப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். தொடர்ந்து தனுஷின் மாரி 2. சூர்யாவின் என்.ஜி.கே உள்ளிட்ட படங்களில் நடித்து வந்தார்.

கைவசம்லவ்ஸ்டோரி. ViraataParvam என இரு திரைப்படங்களை வைத்துள்ளார். பட வாய்ப்பில்லாமல் இருக்கும் நடிகை சாய் பல்லவி, முன்னணி நடிகருக்கு தங்கையாக நடிக்கவிருக்கிறாராம்.

ஆம் அஜித் நடிப்பில் வெளியான வேதாளம் படத்தின் தெலுங்கு ரீமேக்கில் முன்னணி நடிகர் சிரஞ்சீவி நடிக்கவிருக்கிறார். இப்படத்தில் லட்சுமி மேனன் நடித்துள்ள அதே கதாபாத்திரத்தில் தெலுங்கில் நடிகை சாய் பல்லவி நடிக்கவிருக்கிறார் என்று தெரியவந்துள்ளது.

இதனால் மார்க்கெட் இழந்துவிட்டாரா? நடிகை சாய் பல்லவி என்றும், ஏன் இந்த தீடீர் முடிவு என்றும் ரசிகர்கள் கேட்டு வருகின்றனர்.

## நயன்தாரா இல்லனா ஜோதிகா

கடந்த ஆண்டு மலையாளத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் கவனத்தை பெற்ற படம் பிரதி பூவன்கோழி. இப்படத்தில் சோலோ ஹீரோயினாக மஞ்சு வாரியார் நடித்திருந்தார்.

ஓடும் பேருந்தில் தன்னிடம் ஈபிடீஸிங் செய்யும் ரவுடியை தேடிச்சென்று பழிவாங்கும் துணிச்சலான பெண்ணின் கதை தான் இந்த பிரதி பூவன்கோழி.

இப்படத்தின் தமிழ் மற்றும் தெலுங்கு உரிமையை மறைந்த நடிகை ஸ்ரீ தேவியின் கணவர் போனி கபூர் தயாரிப்பு நிறுவனம் வாங்கியுள்ளது.

மஞ்சு வாரியார் நடித்திருந்த கதாபாத்திரத்தில் நடிகை நயன்தாராவை நடிக்க வைக்க படக்குழு திட்டமிட்டு நயன்தாராவுடன் பேசு வார்த்தை நடந்து வருகிறதாம்.

ஆனால் நயன்தாரா இப்படத்தில் நடிக்கவில்லை என்றால், நடிகை ஜோதிகாவை இப்படத்தில் நடிக்க வைக்க அடுத்தகட்ட முயற்சியில் படக்குழு ஈடுபடுமாம்.



## இலவசமான படத்தை நடித்து கொடுத்த யோகி பாபு

தமிழ் சினிமாவில் தற்போது நகைச்சுவை நடிகர்களில் முன்னிலையில் இருந்து வருபவர் நடிகர் யோகி பாபு.



ஆம் தமிழ் திரையுலகில் உள்ள முன்னணி நட்சத்திரங்களான விஜய், ரஜினி, அஜித், சூர்யா, விக்ரம், என பல முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்து விட்டார்.

இதுமட்டுமின்றி சோலோ ஹீரோவாகவும் பல படங்களில் நடித்து வருகிறார். அப்படிப்பட்ட ஒரு படம் தான் பேய் மாமா.

சமீபத்தில் இப்படத்தின் இசை வெளியிட்டு விழா நடைபெற்றது. இதில் பேசிய யோகி பாபு :

" நான் அதிகமாக சம்பளம் வாங்குவது இல்லை என்றும் இயக்குனர் செல்வராகவன் அவர்களிடம் உதவியாளராக இருந்த பெண் இயக்குனர் ஒருவர் தன்னை அணுகி, தான் ஒரு திரைப்படம் இயக்க விரும்புவதாகவும் உங்களை வைத்து ஒரு கதை எழுதி இருப்பதாகவும் இந்த படம் வெளிவந்தால் தான் தனக்கு திருமணம் என்றும் கூறினார். அவருக்காக அந்த படத்தில் நான் இலவசமாக நடித்துக் கொடுத்தேன்"

## 2020ல் அதிகம் சம்பளம் வாங்கும் தமிழ் நடிகர்கள்

தமிழ் திரையுலகில் தற்போது ஒரு படத்தின் வெற்றியை பொறுத்து தான் ஒவ்வொரு நடிகர்களின் சம்பளமும் மார்கெட்டில் உயரும்.



அந்த வகையில் தற்போது சம்பளத்தில் டாப் 3 இடத்தில் இருப்பவர்கள் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், தளபதி விஜய் மற்றும் தல அஜித்.

இவர்களுக்கு பின் அதிகம் சம்பளம் வாங்கும் நடிகர்களாக விளங்கி வருபவர்கள், நடிகர் சூர்யா, விக்ரம், தனுஷ் உள்ளிட்ட நடிகர்களை கூறலாம்.

இந்நிலையில் 2020ல் தமிழ் திரையுலகில் அதிகம் சம்பளம் வாங்கும் நடிகர்களின் பட்டியல் குறித்து தகவல்கள் தெரியவந்துள்ளது.

1. ரஜினிகாந்த் – ரூ. 105 கோடி

2. விஜய் – ரூ.80 கோடி

3. அஜித் – ரூ. 55 கோடி

4. சூர்யா – ரூ. 30 கோடி

5. தனுஷ் – ரூ. 15 கோடி – அடுத்தாக நடிக்கவிருக்கும் படத்தில் ரூ. 25 கோடி

6. விக்ரம் – ரூ. 15 கோடி

7. ஜெயம் – ரூ. 10 கோடி

8. சிம்பு – ரூ. 10 கோடி

9. சிவகார்த்திகேயன் – ரூ 8 கோடி – ரூ. 10 கோடி

10.விஜய் சேதுபதி - 8.5 கோடி




## என்றும் இளமையாக, முக பொலிவுடன் இருக்க பப்பாளியின் பேஷியல்!

முகத்தின் முழு அழகையும் நாம் பராமரிப்பது மிக அவசியமாகும். இதற்காக பல வகையான வேதி பொருட்களை முகத்தில் வாங்கி பூசி கொள்ள தேவை இல்லை.

மாறாக நம் வீட்டில் இருக்கும் ஒரு சில பொருட்களை வைத்தே நாம் அழகு பெறலாம். அந்த வகையில் பப்பாளி முக்கிய இடத்தை பிடித்துள்ளது. பப்பாளியில் பல வகையான ஊட்டசத்துக்களும், தாதுக்களும் உள்ளன.

பப்பாளி பழம் உடல் ஆரோக்கியத்திற்கு நலம் சேர்ப்பதோடு சரும பொலிவையும் மெருகூட்டும். முகத்தில் படியும் அழுக்கையும், எண்ணெய் பிசுபிசுப்பு தன்மையையும் நீக்கும். சருமத்தில் படிந்திருக்கும் இறந்த செல்களை நீக்கி மென்மையையும், பொலிவையும் பெற்று தரும்.

பப்பாளி பழத்தை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் சிறிதளவு தேன் மற்றும் பால் கலந்து பசைபோல் குழைத்துக்கொள்ள வேண்டும். அதனை முகம், கழுத்து பகுதியில் பூசி, சில நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி வந்தால் சருமம் மிளிரும்.

இன்றைய திகதியில் வீட்டை விட்டு வெளியே வந்தால் மட்டுமல்ல வீட்டிற்குள்ளே இருந்தாலும் தூசி அழுக்கு போன்ற பல விஷயங்கள் நம் அழகை கேள்விக்குறி ஆக்குகிறது. தூய்மையற்ற காற்று நம்மை சுற்றிலும் தற்போது பரவி இருக்கிறது. இதனால் நமது சரும ஆரோக்கியம் கேள்விக்குறி ஆகிறது.

**பேஸ் மாஸ்க்**

1/4 கப் கொக்கோ, 2 டீஸ்பூன் க்ரீம், 1/4 கப் கனிந்த பப்பாளி கூழ், 2 டீஸ்பூன் ஓட்ஸ் பொடி மற்றும் 1/4 கப் தேன் சேர்த்து நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின் அதை முகத்தில் தடவி 10 நிமிடம் நன்கு ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும்.

**பருக்கள் நீங்க**

பப்பாளி விதைகளை நன்றாக அரைத்து கொள்ளவும். பிறகு இவற்றுடன் எலுமிச்சை சாற்றை சேர்த்து மீண்டும் நன்றாக அரைத்து கொண்டு முகத்தில் உள்ள பருக்கள் இருக்கும் இடத்தில் பூசினால் பருக்கள் நீங்கும். மேலும், பப்பாளி விதையில் வைட்டமின் எ உள்ளதால் முகம் பொலிவும் பெறும்.

**கரும்புள்ளிகள் நீங்கள்**

பப்பாளிப்பழத்தை சாறு எடுத்து வைத்துக் கொண்டு அதனை பஞ்சினால் முகம் முழுதும் ஒற்றி எடுக்கவும். பின்னர் உலர வைத்துக் கழுவி விடவும். பப்பாளிப்பழத்தை நன்றாக பிசைந்து அந்த சதையை முகம் முழுதும் தடவுங்கள். 20 நிமிடம் கழித்து முகம் கழுவுங்கள். இப்படி செய்வதால் கரும்புள்ளிகள் மற்றும் மங்கு போன்றவை மறைந்து முகம் பொலிவாக மாறும்.



பேசாமா போயிடு என்று அவள்
சொல்லும் வார்த்தைக்குள்
என்னவளின் அகராதியில்
எங்க நீ போய் தான்
பாரேன் என்று
பொருள் !!!

ஒரே ஒரு முறை நீ என்
இதயமாக
இருந்து பார் அப்போது
உனக்கு
புரியும் தான் உனக்காக எப்படி
துடித்திருப்பேன் என்று உன்
கனவு கலைக்க மனமின்றி!!!






## இரவில் படுக்கும் முன் வாழைபழம் சாப்பிடலாமா???


இரவில் காரமான உணவை சாப்பிடுபவர்கள் ஒரு வாழைப்பழம் சாப்பிடுவது நெஞ்செரிச்சல் மற்றும் வயிற்றுப்புண்ணை குணப்படுத்தும்.

இரவில் இனிப்பு பலகாரங்களை சாப்பிட விரும்பினால் அதற்கு பதிலாக வாழைப்பழம் சாப்பிடலாம்.

வாழைப்பழத்தில் விட்டமின்களும், நார்ச்சத்துக்களும் ஆரோக்கியத்திற்கு நலம் சேர்க்கும்.

இரவில் வாழைப்பழத்தை சாப்பிடுவது நல்ல தூக்கத்தையும் தரும்.

ஆனால் ஆஸ்துமா, சைனஸ், சளி தொந்தரவு இருப்பவர்கள் இரவில் வாழைப்பழம் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.



தொகுப்பு :- சப்தஹி

# உளச் சமூகத் தலையீட்டின் முதலுதவி

கடந்தவாரத் தொடர்ச்சி...

**உளநல முதலுதவி தேவைப்படும் நபர்களை அடையாளம் காணுவது எப்படி?**

ஒருவரைப் பார்த்தவுடன் அவருக்கு உளநல முதலுதவி தேவை என்று பொது மக்களால் கண்டறிய இயலாது. ஆனால், தீவிர மன மற்றும் உணர்வுத் துயரத்தைச் சந்திப்போர், சில குறிப்பிட்ட எண்ணங்கள், நடத்தைகள் மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள், உளநல பிரச்சினையை ஐந்து முக்கிய வகைகளாகப் பிரித்து இதைவைத்து அவர்களுடைய துயரத்தைக் கண்டறிய உதவியாக இருக்கும். ஒருவரின் உணர்வுகள், எண்ணங்கள் அல்லது நடத்தை ஆகியவற்றைப் பாதித்து அவருடைய வாழ்க்கையிலோ அல்லது அவருடைய குடும்பத்தினரின் வாழ்க்கையிலோ எதிர்மறை பாதிப்பை விளைவிக்கும் விதத்தில் ஒருவர் அனுபவிக்கும் உளநல முதலுதவி தேவை.

உதாரணமாக, உடல் சார்ந்த நோய்க்குறிகள்: உடல்வலி, களைப்பு, சோர்வு, எடைக்குறைவு, ஜீரணக்கோளாறு, பசியின்மை, தூக்கமின்மை உடல்சோர்வு. மூளைக்காயம் / குறைபாடு. மது, போதைப்பழக்கம். தொற்றால் உண்டாகும் மூளைச் சிதைவு, நாக்கு வறட்சி, பேச்சில் தடுமாற்றம், வயிறுவலி, புலியல் பிரச்சினை ஆகியவற்றோடு உடலையும் உடலின் செயல்பாடுகளையும் பாதிப்பவை போன்றவையாகும்.

உணர்வுசார்ந்த நோய்க்குறிகள்: பயம், சோகம் அல்லது பதற்றம் வருத்தம், குற்றவுணர்வு, எளிதில் கண்ணீர் விடுவது அடிக்கடி அழுதல், தன்னம்பிக்கையின்மை, உதவியற்ற உணர்வுகள், நம்பிக்கையற்ற உணர்வு. நீடித்திருக்கும் கவலை அல்லது எரிச்சல் மாறிவரும் அதிக சந்தோஷம் / அதிக கவலை போன்றவையாகும்.

அறிதிறன் (சிந்தனை) நோய்க்குறிகள்: தெளிவற்ற சிந்தனை, எதிர்மறையான எண்ணங்கள். தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம், தெளிவாகச் சிந்திக்க இயலாமை, குழப்பமாக இருத்தல், தன்னைத்தானே குற்றம் சாட்டிக்கொள்வது, நம்பிக்கையற்ற உணர்வுகள்ஞாபகமறதி, அதிகமாக சந்தேகப்படுதல் தொடர்ந்து பாலியல் எண்ணங்களோ / ஆசையோ இல்லாமல் இருத்தல் பாலுறவில் வெறுப்பு / துணையை இது சம்பந்தமாக தவிர்ப்பது போன்றவையாகும்.

நடத்தை சார் நோய்க்குறிகள் : தோல்வி, கவனம் செலுத்தாமல் இருத்தல், விருப்பமான செயல்களில் கூட ஆர்வம் இல்லாமல் இருத்தல், சமூகத்திலிருந்து ஒதுங்கியிருப்பது, மூர்க்கமாக நடந்து கொள்ளுதல், அடிக்கடி கோபம் கொள்ளுதல் எரிச்சலடைந்து இருப்பது, தற்கொலைக்கு முயற்சி செய்தல் பள்ளி / கல்லூரி / பணியிடத்துக்குப் போக மறுத்தல் தனிமையை நாடுவது, குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து விலகுவது, உணவுமற்றும்தூங்கும்பழக்கத்தில் மிகுந்த மாற்றம் ஏற்படுவது, தினசரி செயல்பாடுகளைக் கூட சமாளிக்க முடியாமல் திணறுதல், தன்னைத்தானே காயப்படுத்தி கொள்ளுதல் போன்றவையாகும்.



புலன்சார் நோய்க்குறிகள் : தேர்வில் தோல்வி, விபரீத கற்பனை, மாயக்குரல் கேட்டல், தனக்குத்தானே பேசிக்கொள்ளல் - சிரித்துக்கொள்ளல், அனைவரும் தன்னைப் பற்றியே பேசியதாக உணர்வு, கண்களுக்குத் தெரியாத காட்சிகளைக் காண்பதாக உணர்வு, இல்லாத விஷயத்தைப் பார்ப்பது / யாரோ தம் காதில் பேசுவது போல உணர்தல், திரும்பத்திரும்ப தொந்தரவு செய்யும் விரும்பத்தகாத எண்ணங்கள் / திரும்பத்திரும்ப ஒரே செயலை கட்டுப்பாடின்றி பதற்றத்துடன் செய்வது (உதாரணம் அடுப்பை அணைத்துவிட்டோமா என பலமுறை சரிபார்ப்பது / கையை கழுவிக்கொண்டே இருப்பது) போன்றவையாகும்.

மற்றவர்கள் மதிக்காதது போல் உணர்தல், உதவிக்கு யாருமில்லாதது போல் உணர்தல், தற்கொலை எண்ணம் மற்றும் தற்கொலைக்கு முயற்சி செய்தல், இவை மன அறிகுறிகளாக இருக்கின்றன. இந்தச் சூழல்கள் நம்மில் தென்படின் எவ்வளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை பார்த்தல், செவிமடுத்தல், இணைத்தல், தயார்ப்படுத்தல், பரிசோதனை கோட்பாட்டினை புரிந்து அல்லது தெரிந்துகொண்டு உளநல முதலுதவியை வழங்கவேண்டும். இணையத்தளத்தினூடான சமூக வலைத்தள பாவனையினாலும் பல்வேறு உளநலப் பாதிப்புக்களைப்பாவனையாளர்கள் எதிர்நோக்குகின்றனர். தங்கள் உணர்வுகளை சமூக வலைத்தளப் பதிவுகளில் பாவிக்கிறார்கள். முகநூல் கமென்ட்டில் யாரேனும் ஏதாவது சொன்னாலோ அல்லது லைக் வரவில்லை என்பதற்காகவோ, அலுவலக வேலைப்பழுவை வீட்டில் இருப்போரிடம் எரிந்து விழுவதோ கூட ஒரு வகையில் உளநலம்பாதிப்பு தன்மையே. வீதியில், தனியாக பேசிகொண்டு அழுக்கு உடையுடன் சுய கவனிப்பில்லாது இருப்பவர்கள் தான் உளநலம் பாதிக்கப்பட்டவர் என்றில்லை.

உண்மையில் இந்த நோய்க்குறிகள் வெவ்வேறாக வெளிப்பட்டாலும், அனைத்தும் ஒன்றொடு ஒன்று தொடர்புடையன. சில நேரங்களில், அந்த நபருக்கு உளநல நிபுணர்களின் உதவி தேவைப்படலாம், ஆனால் பெரும்பாலும் அவர்கள் புரிந்து கொள்ளும் உரையாடல்கள் மற்றும் ஆதரவைத்தான் மற்ற நபர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர். நாம் ஒவ்வொருவரும், தங்களை தைரியமான, வாழ்க்கையின் சவால்களை யாருடைய துணையும் இன்றி தாங்களே எதிர்கொள்ளும் சக்தி உடையவர்கள் என நம்பினாலும், சில நேரங்களில் மற்றவரிடம் உதவி பெறுவது என்பது நடைமுறை அவசியமாகிறது. இன்னும் சொல்லப்போனால், 'தன்னால் முடியாதபோது, அதை ஒப்புக்கொண்டு மற்றவரிடம் உதவிகேட்பது' என்பது ஒரு தனி மனிதனின் பலம் என்று சொன்னால் அது மிகையாகாது. பின்வரும் தருணங்களில், உளவியல்பூர்வமான உதவியை நாடுவது மிகவும் அவசியம். உரிய மருத்துவ சிகிச்சை கிடைக்காத உளநலப் பிரச்சினை உள்ளவர்கள் புறக்கணிக்கப்படுதல், சமூகத்தில் ஓரங்கட்டப்படுதல் போன்ற செயல்பாடுகளால் நோயின் தாக்கம் அதிகரிக்கிறது.

**உளநல முதலுதவியை யார் வழங்கலாம்?**

இது உளவியல் சிகிச்சை அல்ல உளவியல் அல்லது உளநல முதலுதவி. யார் வேண்டுமானாலும் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். தேவையுள்ளவர்களுக்கு அவர்களை வருத்தாமல் ஆலோசனை வழங்குவதே உளவியல் முதலுதவி ஆகும். உளநலப் பிரிவு - வைத்திய சாலை, பிரதேச செயலகம் - DS, கச்சேரி, சமூக சேவைகள் திணைக்களம், (ONUR), உளசமூகப் பணியாளர்கள் (psw), பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் (WDO), மருத்துவச்சி (PHM), மதத் தலைவர்கள், கிராமசேவகர் (GS), சமுர்த்தி உத்தியோகத்தர்கள் (SDO), சமூக சேவைகள் உத்தியோகத்தர் (SSO), பாடசாலை சூழலில் உளவளத்துணை ஆசிரியர், அதிபர், வகுப்பாசிரியர், நம்பிகைக்குரிய ஆசிரியர், பாட ஆசிரியர், ஆன்மீகவாதிகள், உளநல வைத்தியர்கள், பிரதேச வைத்தியர்கள், நாட்டு வைத்தியர்கள், அண்மையில் இலகுவாக அணுகக்கூடிய உறவினர்கள், நம்பிக்கைக்கு உரியவர்கள், குறித்த நபரின் குடும்ப உறுப்பினர்கள்., நெருக்கமான உறவினர்கள், நண்பர்கள், ONUR உளச்சமுகப் பணியாளர்கள், தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள் (NGO) ஆகியோர் பாதிக்கப்பட்டவர்களின் உரிமை, மாண்பு, பாதுகாப்பு ஆகிய மூன்றுக்கும் அணுவளவும் குறை ஏற்பட்டுவிடாமல், அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முதலுதவியை வழங்கவேண்டும்.

**உளநல முதலுதவியை வழங்குவது எப்படி?**

எனக்குத் தெரிந்த ஒருவர் உணர்ச்சிக் கொந்தளிப்பில் இருப்பதை ஒருவர் பார்த்தால், அவரை அணுகிப் பேசலாம். இந்தப் பேச்சு பச்சாத்தாபத்துடன், அவரைப் பற்றி எந்தத் தீர்மானத்தையும் எடுக்காமல், ரகசியமாக இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ஒரு வங்கி முகாமையாளரின், ஒரு கீழ்நிலை பணியாளருக்கு இடையில் இடபெற்ற சிறு பகுதி உரையாடலைப் பாருங்கள்:

முகாமையாளர் - வணக்கம் மேரி, நீங்கள் இப்போது சில நாட்களாக மிகவும் மந்தமாக மற்றும் சோர்வாகத் தெரிகிறீர்கள்... ஏதாவது சரியில்லையா...?

மேரி - வணக்கம் சேர். எனது அம்மா உடல்நலமின்றி உள்ளார்... (மேரி கண்கள் கலங்கியது... முகாமையாளர் தன்னுடைய முகாயினை மெதுவாக சாத்திவிட்டு... முகாமையாளர் தனது மேசைக்கு முன்னால் உள்ள இருக்கையில் மேரியை இருக்கும் படி கூறினார். மேரி இருக்கையில் இருந்தார்)

முகாமையாளர் - அம்மா உடல்நிலை பற்றி கூறினீர்கள்....

மேரி - ஓம் சேர். அம்மாவின் உடல்நிலை மோசமாகிவிட்டது.... நான் வேலையின் காரணமாக அவருடன் நேரம் செலவழிக்க இயலவில்லை...

முகாமையாளர் - நீங்கள் அவரை மருத்துவரிடம் கூட்டிச் சென்றீர்கள். அவர்கள் என்ன கூறினார்கள்?

மேரி - வைத்தியர்கள் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்றார்கள்... அவரது மருந்துகள் வேலை செய்தில்லை எனவும் மேலும் அவரை இயன்றவரை அமைதியாக கூட இருந்து பார்த்துக் கொள்ளுமாறு கூறினார்..

முகாமையாளர் - ஓ... நீங்கள் சொல்வதை என்னால் உணர முடிகிறது...

மேரி - நான் அவரைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துச் சோர்வடைந்து விட்டேன், மேலும் நான் அவருடன் நேரம் செலவழிக்க இயலவில்லை. அவரின் இறுதி நேரத்தில் கூட என்னால் அவருடன் இருக்க முடியவில்லை. மோசமாக உணர்கிறேன். (தொடர் உரையாடலின் பின்னர்)

**தொடரும்...**

**நிலவன் உளவளத்துணையாளர் மற்றும் உளசமூகப் பணியாளர்.**

# தொல்லியல் வடிவத்தில் அடுத்த கட்டப் போர்

**– என்.சரவணன்**

**கடந்த வாரத் தொடர்ச்சி...**

வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் "மகாவம்சம் ஐந்தாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்டபோது இந்தத் தீவில் பௌத்தர்கள் இருந்தார்கள். சிங்களவர்கள் இருக்கவில்லை." என்கிற தொனியில் விக்னேஸ்வரன் பேசிய பேச்சு சமீபத்தில் சர்ச்சைகளை தோற்றுவித்தது. அதை எதிர்த்து கருத்து வெளியிடுவதற்கு இனவாத தரப்பினர் ராஜ் சோம தேவவைத் தான் பயன்படுத்திக் கொண்டார்கள். பேரினவாத முகாமுடன் நேரடியாக கைகோர்க்காவிட்டாலும். ஆங்காங்கு பேரினவாதிகள் தமக்கு தேவையான போதெல்லாம் இவரை பயன்படுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது.

**பேராசிரியர் கபில குணவர்த்தன**
பேராதனை பல்கலைக்கழகம், வைத்திய பீடம்.

**தேசபந்து தென்னக்கோன்**
சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், கிழக்கு மாகாணம். கோட்டபாயவுக்கு மிகவும் நெருக்கமானவர். அடுத்த பொலிஸ் மா அதிபர் பதவி தனக்கு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருப்பவர். குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பொலிஸ் மா அதிபராக இருந்தவர்.

**திரு.எச்.ஈ.எம்.டப்ளிவ்.ஜி.திசாநாயக்க**
இவர் கிழக்கு மாகாண காணி ஆணையாளர். சமீபகாலமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் காணிப் பிரச்சினைகளின் போது தலையிட்டு சிங்களத் தரப்புக்கு சாதகமான தீர்மானங்களை நிறைவேற்றி வருபவராக குற்றம் சாட்டப்படுபவர்.

**திரு.திலித் ஜெயவீர**
திலித் ஜெயவீர இந்த தொல்லியல் செயலணிக்கு ஏன் கொண்டுவரப்பட்டார் என்கிற கேள்வி அனைவருக்கும் எழுகிறது. இத்துறைசார் எந்த அறிவோ அதிகாரமோ, தகுதியோ இல்லாதவர். ஆனால் பெரும் கறுப்புப் பண தொழிலதிபர் என்று அழைக்கப்படுபவர். தெரண ஊடக வலையமைப்புக்குச்சொந்தக்காரர். தெரண தொலைக்காட்சி இலங்கையின் இன்று முன்னணி சிங்கள - ஆங்கில தொலைக்காட்சிகளில் ஒன்றாக மாறியிருக்கிறது. அவர்களின் செய்திகள் ஏனைய செய்திகளை பின்னுக்கு தள்ளிவிட்டிருக்கிறது. திலித் ஜயவீர ஒரு ராஜபக்ச குடும்பத்துக்கு நெருக்கமானவரும் கூட. மகிந்த ஆட்சி காலத்தில் வருணி அமுனுகம (அமைச்சர் சரத் அமுனுகமவின் மகள்) வுடன் கூட்டுசேர்ந்து திலித் ஜயவீர தெரணவை ஆரம்பித்தார். அதற்கான (Derana Macro Entertainment (Pvt) Ltd) அனுமதியை மகிந்த இலவசமாகவே வழங்கினார் என்கிறது newsofcolombo.com என்கிற இணையத்தளம். ஒரு விளம்பர நிறுவனமாகவும் இந்த நிறுவனம் இயங்கிய நிலையில் திடீரென பெரும் பணக்கார நிறுவனமாக குறுகிய காலத்தில் ஆனது எப்படி என்கிற சந்தேகம் இன்றும் உண்டு. ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாயவின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தவர். "தெரண" ராஜபக்ச கும்பலின் முக்கிய பிரச்சார ஊடகமாகவும் மகிந்தவின் எதிரிகளையும், அரசாங்கத்தையும் தாக்குவதற்கான ஆயுதமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தொல்லியல், சிங்களப் பாரம்பரியம் சார்ந்த பல நிகழ்சிகளை ஒளிபரப்பி வருகிறது. இராவணனை சிங்களவர்களின் தலைவராகப் புனையும் ஒரு தொடர் நாடகத்தையும் தெரண சொந்தமாக இயக்கி வெளியிட்டு வருகிறது. தொல்லியல் சார் பணிகளை முன்னெடுப்பதற்கும் சிங்கள பௌத்தர்களை மூளைச்சலவை செய்து தூண்டி அணிசேர்க்கும் வேலைக்கு இவர்களின் ஊடக வலைப்பின்னல் அதிகமாக இந்த செயலணிக்குத் தேவைப்படலாம்.

ஜனாதிபதி செயலாளரால் யூலை 07ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட "அதிவிசேட" வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் இராணுவத்தைச் சேர்ந்த மேலும் ஒருவர் இந்த செயலணிக்கு இணைக்கப்பட்டார். அவர் ரியல் அத்மிரல் ஆனந்த பீரிஸ். இவர் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவியில் இருப்பவர். இந்த தொல்லியல் செயலணிக்கு தலைவராக எந்த அரச அதிகாரிகளோ, அல்லது துறைசார் நிபுணர்களோ நியமிக்கப்படவில்லை. மாறாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தலைவராக நியமிக்கப்பட்டார்.

திருகோணமலையை இலக்கு வைத்து இப்போது திருக்கோணேஸ்வரர் ஆலயப் பகுதியை ஆக்கிரமிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கத் தொடங்கியிருக்கிறது சிங்களப் பேரினவாதம். ஈழப் போராட்டக் காலத்தில் சகல இயக்கங்களுமே எதிர்காலத் தமிழீழத்தின் தலைநகராக யாழ்ப்பாணத்தை முன்னிறுத்தவில்லை. மாறாக திருகோணமலையைத் தான் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரதான நகரம் மட்டுமல்ல, அது வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட பிரதேசம். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். திருகோணமலைத் துறைமுகத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் இந்து உபகண்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு சமம் என்று மகா அலெக்சாண்டர் அப்போது கூறியதாகக் கூறுவர்.

**தொடரும்...**

# கொரோனா

**(எழுத்தாளர் புயல் பெ.ஸ்ரீகந்தநேசன்)**

**கடந்த வாரத் தொடர்ச்சி...**

அன்றிலிருந்து இரண்டாயிரத்து இருபது வரை அமெரிக்கா பல நாடுகளை சீரழித்துவிட்டது. அவ்வாறான திட்டங்களில் ஒன்றுதான் சீனாவில் வைரஸ் உருவாக்கம் என சீனா வெளிப்டையாக அமெரிக்காவைக் குற்றம் சுமத்தி வந்தது. அமெரிக்காவோ சீனாதான் தனது பொருளாதார இலாபத்திற்காக இந்த வைரசை ஐரோப்பிய நாடுகள் மீது ஏவிவிட்டுள்ளது என்று குற்றம் சுமத்தியது. இந்த வாத பிரதி வாதங்கள் ஒரு பக்கம் இருக்க, இந்த வைரஸாலும் ஊரடங்குச் சட்டங்களாலும் உலகெங்கும் அதிக பாதிப்படைவது உழைக்கும் அப்பாவி மக்களே என்பது பளிச்சிட்டது. அதே மாதமும் அடுத்த அடுத்த மாதங்களிலும் உலகத்தை வைரஸ் ஆட்கொண்டது. சீனாவை வேடிக்கை பார்த்த வல்லரசுகள் அடியற்ற மரங்கள் போல மிரண்டு நின்றன. இலங்கையில் பாராளுமன்ற தேர்தலுக்கான ஆயத்தங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது. சுய இலாபம் தேடும் அரசியல் வாதிகள் இன வாதம், மத வாதம், பிரதேச வாதம், வர்க்க வாதம் வியாபார வாதம், பெண்ணடிமை வாதம் பேசியவர்கள் இப்போது வைரஸ் வாதத்தை வைத்து அரசியல் செய்ய தயாராகிவிட்டார்கள். ஊரடங்குச் சட்டத்தினால், ஏழைகள் பட்டினியால் சாகவும் வருத்தத்தினால் வருந்தவும் துணிந்து விட்டார்கள்.

இலங்கையில் ஒரு காலத்தில் மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழ்ந்த காலம் மலையேறிவிட்ட நிலையில், பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அரசியற் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் கொரோனாவிற்கு எதிராக போராடுவதாகக் கூறி மாயாஜால வித்தைகள் காட்டின. ஊரடங்குச் சட்டத்தினால், சாதாரண மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. விவசாய உற்பத்திகள் வீணடிக்கப்பட்டன. நீதிமன்றங்கள், வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள் எல்லாம் கால வரையறை இன்றி மூடப்பட்டுக்கிடந்தன. வீதியில் மனிதர்களின் நடமாற்றம் குறைந்தமையால் காட்டில் வாழும் விலங்குகளும் பறவைகளும் நாட்டிற்குள் வந்து உல்லாசமாக - சுதந்திரமாக - நடமாடின. வாகன ஓட்டங்களும் தொழிற்சாலைகளின் இயக்கமும் விமான ஓட்டங்களும் தடைப்பட்டமையால், சூழலின் வெப்பநிலை குறைவடைந்து தூய்மையான காற்று வீசியது. இயற்கை மனிதனை வெற்றி கொண்டு விட்டதைப்போல நிம்மதிப் பெரு மூச்சுவிட்டது. விலங்குகளை விட மனிதர்களையே அதிகம் இந்த தொற்று நோய் பரவுவதாகவும் சில இடங்களில் விலங்குகளுக்கும் பரவியுள்ளதாக செவிவழியாகப் பல கதைகள் உலாவந்தன. சாத்திரங்களும் சமயங்களும் மக்களுக்குப் பொய்யாகத் தென்பட்டன. மனி



தன் இவ்வளவு காலம் ஆடிய ஆட்டங்களை எண்ணியும் இப்போது அவனின் பரிதாப நிலையையும் பார்த்த, இயற்கையும் உயிரினங்களும் வெட்கம் - கவலை - கொண்டன. மனிதன், இயற்கையை அழித்ததன் விளைவுகளையும் உயிரினங்களைக் கொன்று தின்றதன் பாவத்தையும் உணர்ந்து கொண்டான். பகலும் இரவும் ஒரே மாதிரி அமைதியாகக் காட்சியளித்தன.

மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் முழுமையாக உலகம் எங்கும் பாதிக்கப்பட்டன. பாடசாலைகளும் முன் பள்ளிகளும் காலவரையறை இன்றி மூடப்பட்டமையால் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் ஸ்தம்பிதமாகி மாணவர்களும் ஆசிரியர்களும் பல்வேறு உளச்சிக்கல்களுக்கு உள்ளாகியிருந்தனர். 'ஸ்மாட் போன்' மூலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறத்தொடங்கின. இவ் நவீன கற்றல் - கற்பித்தல் முறையில் வசதி படைத்த மாணவர்களே அதிக நன்மைகளைப் பெற்றனர். வசதி படைத்த சிலரால், கல்வி நவீன தொடர்பாடல் சாதனங்கள் மூலம் சையிட்டத்தைப் போல வியாபாரப் பண்டமாக மாறியது.

இவ்வாறன சூழலில் இலங்கையிலிருந்து இத்தாலி நாட்டிற்கு போவதற்குப் புறப்பட்டான், சாத். வெளிநாட்டிற்கான விமாப் பயணங்கள் அனைத்தும் நாளைய மறு தினத்துடன் நிறுத்தப்படவுள்ளன. என்று அரசாங்கம் சுற்று நிருபத்தை வெளியிட்டது. சாத் எப்படியாவது யாழ்ப்பாணத்திலிருந்து நாளை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்குச் சென்று, தான் புகுந்த நாடான இத்தாலிக்கு சென்று விட எண்ணி நித்திரைக்குச் சென்றான். கட்டிலில் திரும்பித் திரும்பிப் படுத்தான். நித்திரை அவனுக்கு வரவில்லை. அந்த நாள் ஞாபகங்கள் தாமரையிலையில் நீர்போல அவனது உள்ளத்தில் நிழலாடுகின்றன.

இலங்கையில் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறுகளில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் சாத்தின் குடும்பம் யாழ்ப்பாணத்தின் அரியாலை கிராமத்தில் எதிர் நோக்கிய சவால்கள் ஏராளம். யாழ்ப்பாணமே இடம்பெயர்ந்த போது காந்தம் இரும்பை இழுப்பது போல யாழ்ப்பாண மக்களை இழுத்துக்கொண்டது வன்னி மண். கிளாலி கடல் வழி பாதை சனத்திரளால் நிரம்பி வழிந்தது.

**தொடரும்...**




## தடைசெய்யப்பட்ட நிலையில் மீண்டும் பயன்பாட்டிற்கு வருகிறது TikTok

சீன நிறுவனமான பைட் டான்ஸ் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட அப்பிளிக்கேஷனே டிக் டாக் ஆகும். சிறிய வீடியோ டப்பிங் அப்பிளிக்கேஷனான டிக் டாக் ஆனது உலகளவில் குறுகிய காலத்தில் மிகவும் பிரபல்யம் பெற்று விளங்கியது.

எனினும் இந்தியா, அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இந்த அப்பிளிக்கேஷனுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த வாரமே இந்த அப்பிளிக்கேஷன் தடை செய்யப்பட்டது.

சமூக சீர்கேட்டினை ஏற்படுத்துவதாக தெரிவித்தே குறித்த அப்பிளிக்கேஷன் அங்கு தடை செய்யப்பட்டிருந்தது.

எனினும் தற்போது தடை நீக்கி மீண்டும் மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதியளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. மக்களால் பதிவேற்றப்படும் ஆபாசமான வீடியோக்களை நீக்குவதாக அல்லது தடை செய்வதாக உறுதியளிக்கப்பட்ட நிலையிலேயே இவ்வாறு மீண்டும் பாவனைக்கு விடப்படவுள்ளது.




## புதிய ஜிமெயில் லோகா அறிமுகம் செய்யப்பட்டது

கூகுள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வரும் மின்னஞ்சல் சேவையாக ஜிமெயில் காணப்படுகின்றது.

இலவசமாக வழங்கப்பட்டு வரும் இச் சேவையானது உலகில் அதிகளவான மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் மின்னஞ்சல் சேவையாகவும் இருக்கின்றது.


இந்நிலையில் இச் சேவைக்காக ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த லோகா தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

முன்னர் சிவப்பு மற்றும் வெள்ளை நிறங்களை கொண்ட அஞ்சல் உறை வடிவில் லோகா தரப்பட்டிருந்தது.

தற்போது கூகுளின் பிரதான வர்ணங்களான நீலம், சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை வர்ணங்களை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அஞ்சல் உறை வடிவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாற்றப்பட்ட புதிய லோகோவானது அனேகமான பயனர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

விரைவில் அனைத்து பயனர்களுக்கும் இப் புதிய லோகோ தென்படும் என்பது குறிப்பிடத்தக்கது.




## வட்ஸ் அப் வெப்பில் விரைவில் அறிமுகமாகும் அட்டகாசமான வசதிகள்

வட்ஸ் அப்பினை மொபைல் சாதனங்களில் செயலியாக பயன்படுத்தக்கூடிய வசதி காணப்படுகின்றமை தெரிந்தே. அதே போன்று டெக்ஸ்டாப் கணினிகள், மடிக் கணனிகள் என்பவற்றில் இணைய உலாவியில் பயன்படுத்தக்கூடியவாறு வட்ஸ் அப் வெப் எனும் தளமும், மென்பொருளும் காணப்படுகின்றது.




எனினும் இங்கு மொபைல் அப்பிளிக்கேஷன்களைப் போன்று குரல் வழி அழைப்புக்கள், வீடியோ அழைப்புக்களை மேற்கொள்ள முடியாது. மாறாக சட் செய்தல், கோப்புக்களை பரிமாறுதல் என்பவற்றினை மாத்திரம் மேற்கொள்ள முடியும்.

எனினும் குரல் வழி அழைப்புக்கள் மற்றும் வீடியோ அழைப்புக்கள் என்பவற்றினை ஏற்படுத்துவதற்கான வசதிகள் விரைவில் வட்ஸ் அப் வெப்பில் தரப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



இவ் வசதிகள் அறிமுகம் செய்யப்பட்டால் மொபைல் சாதனங்களுக்கு வரும் அழைப்புக்களுக்கு கணினிகளிலும் பதில் அளிக்க முடியும் என்பதுடன் கணினிகளில் இருந்தும் வட்ஸ் அப்பிற்கு அழைப்புக்களை ஏற்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**கடந்த, 20 ஆண்டுகளில், இணைய தொழில்நுட்பம், நம் உலக உருண்டையை தட்டையாக்கியது. அதை கொரோனா பெருந்தொற்று மேலும் தரைமட்டமாக்கியிருக்கிறது.**

மாட் கிளிபோர்டு,
தொழில் முனைவர்,
இங்கிலாந்து



# விளையாட்டு செய்திகள்

## மல்யுத்த போட்டியின் போது தாக்கப்பட்ட வீரர் மேடையிலேயே விழுந்து மரணம்!

மெக்ஸிகோவில் மல்யுத்த போட்டியின் (wrestling) போது தாக்கப்பட்ட வீரர் மேடையிலேயே விழுந்து மரணமடைந்த சம்பவமொன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தலைநகர் மெக்ஸிகோ சிட்டியில் நடைபெற்ற ரெஸ்லிங் போட்டியின் போது லூயிஸ் ஏஞ்சல் (Luis Angel) என்பவர் தனது போட்டியாளரான ரெடிமிடோவை (Redimido) முகத்திலும் வயிற்றிலும் உதைத்தார்.

அடுத்த கட்ட தாக்குதலுக்கு தயாரான போது ரெடிமிடோ திடீரென மேடையிலேயே மயங்கிச் சரிந்தார்.

அப்போது போட்டி நடப்பதாகக் கருதிய ரெடிமிடோவின் நண்பர் ஒருவர் லூயிசைத் தாக்கினார். இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் முன்னரே மூளையில் ஏற்பட்ட பாதிப்பால் ரெடிமிடோ உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.



## சைபர் தாக்குதல்களால் ஒலிம்பிக் போட்டிகள் பாதிக்கப்படாது!

ஜப்பானில் சைபர் தாக்குதல்களுக்கெதிரான நடவடிக்கைகளுடன் ஒலிம்பிக் போட்டிகள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்படுமென அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஜப்பானில் இவ் ஆண்டு நடைபெறவிருந்த ஒலிம்பிக் போட்டிகள், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அடுத்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக்கை சீர்குலைக்கும் வகையில் சைபர் தாக்குதல்களில் ரஷ்ய இராணுவ உளவுத்துறை ஈடுபடுவதாக பிரித்தானியாவும் அமெரிக்காவும் குற்றஞ்சாட்டியிருந்தன.

இதனையடுத்து இணையத் தாக்குதலால் ஒலிம்பிக் போட்டிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என ஜப்பானின் தலைமை அமைச்சரவை செயலாளர் கட்சுனோபு கட்டோ தெரிவித்துள்ளார்.



## ஐபிஎல்2020 : ராஜஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் ஐதராபாத் அணி அபார வெற்றி!

நடப்பாண்டிற்கான ஐபிஎல் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் (Sunrisers Hyderabad) அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் (Rajasthan Royals)அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. அன்றைய(2020.10.22) தினம் நடைபெற்ற குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஐதராபாத் அணி முதலில் பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

இதனைத் தொடர்ந்து களமிறங்கிய ராஜஸ்தான் அணி வீரர்கள், சீரான இடைவெளியில் விக்கெட்டை பறிகொடுத்தனர். அதிகபட்சமாக, சாம்சன் 36 ஓட்டங்களைச் சேர்க்க, ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 154 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதையடுத்து களமிறங்கிய ஐதராபாத் அணியில், சிறப்பாக விளையாடிய மணீஷ் பாண்டே 83ஓட்டங்களையும், விஜய் சங்கர் 52 ஓட்டங்களையும் சேர்த்தனர். இதன் மூலம், 18.1 ஓவர் முடிவில் ஐதராபாத் அணி இலக்கை எட்டி வெற்றி பெற்றது.



## நடப்பு ஐபிஎல் தொடரிலிருந்து பிராவோ விலகல்..!



சென்னை அணியின் நட்சத்திர ஓல்ரவுண்டர் டுவைன் பிராவோ (Dwayne Bravo) உடலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஐபிஎல் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

டெல்லி அணிக்கு எதிரான போட்டியின் போது இடுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாக அல்லலுற்ற பிராவோ, ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இத் தொடரில் எஞ்சியுள்ள போட்டிகளிலிருந்தும் பிராவோ விலகியுள்ளதாக சென்னை அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நடப்பு ஐபிஎல் தொடரில் 10 போட்டிகளில் விளையாடியுள்ள சென்னை அணி, 7ல் தோல்வி அடைந்து புள்ளிப்பட்டியலில் இறுதி இடத்தில் உள்ள நிலையில், தொடரில் இருந்து பிராவோ விலகியிருப்பது அணிக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# உலக செய்திகள்

## ஆப்கானிஸ்தானில் மதரஸா மீது விமானதாக்குதல்- 12 சிறுவர்கள் பலி

ஆப்கானிஸ்தானின் தகார் மாநிலத்தில் மதபாடசாலையொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானதாக்குதலில் 12 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கிராமமொன்றில் அமைந்திருந்த மத்ரஸாவின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானதாக்குதலில் 12 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.



மேலும் 14 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவித்துள்ள உள்ளூர் அதிகாரிகள் மசூதியின் இமாமும் காயமடைந்துள்ளார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என குறிப்பிட்டுள்ளனர். தாக்குதல் இடம்பெற்றவேளை இமாமும் மாணவர்களும் மாத்திரம் மசூதியிலிருந்தனர் என உள்ளூர் மக்கள் தெரிவித்துள்ளனர். மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட உடல்கள் அனைத்தும் சிறுவர்களின் உடல்கள் என்பதை மருத்துவமனை வட்டாரங்கள் உறுதிசெய்துள்ளன. மாறில ஆளுநரின் பேச்சாளரும் சிறுவர்களே கொல்லப்பட்டுள்ளனர் என்பதை உறுதி செய்துள்ளார்.

எனினும் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் சிறுவர்கள் கொல்லப்பட்டனர் என்பதை நிராகரித்துள்ளதுடன் தலிபான் தீவிரவாதிகளே கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட மாகாணத்தில் தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 30க்கும் அதிகமான ஆப்கான் படையினர் கொல்லப்பட்டுள்ள நிலையிலேயே இந்த விமான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.



## துருக்கியைப் புறக்கணிக்கும் சவுதி அரேபியா!

துருக்கி நாட்டுப் பொருட்களை புறக்கணிக்க சவுதிஅரேபியா முடிவு செய்துள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவு மேலும் மோசமடைந்துள்ளதாகத்தகவல் வெளியாகியுள்ளது. பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி (Jamal Khashoggi)சவுதி அரேபியாவில் துருக்கி தூதரகத்தில் இரு ஆண்டுகளுக்கு முன் கொல்லப்பட்ட நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் போக்கு நீடித்து வருகிறது.



அந்தவையில் துருக்கியிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட துணிகள் உள்ளிட்ட பொருட்களும் இறக்குமதி செய்யாமல் தாமதம் செய்யப்பட்டதாக புகார் கூறப்பட்டது. இந் நிலையில் சூப்பர் மார்கெட் கடைகளில் அனைத்து துருக்கி பொருட்களை விற்பனை செய்யாமல் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளனர். அதன் பின்னணியில் சவுதி அரசு இருப்பதாக கூறப்படுகிறது. ஏற்கனவே பொருளாதாரம் நலிவடைந்துள்ள துருக்கி அரசுக்கு இது மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

## பாகிஸ்தானில் அடுக்குமாடி குடியிருப்பில் குண்டுவெடிப்பு!

பாகிஸ்தானில் அடுக்குமாடி குடியிருப்பில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் சிக்கி 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தின் தலைநகர் கராச்சியிலுள்ள 4 மாடிகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புக் கட்டிடமொன்று உள்ளது.

இக் குடியிருப்பின் கீழ் தளத்தில் தனியார் வங்கி ஒன்று இயங்கி வருவதோட ஏனைய 3 தளங்களிலும் பல குடும்பங்கள் வசித்து வருகின்றன.



இந் நிலையில் காலை குறித்த குடியிருப்பின் முதல் தளத்தில் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது.இக் குண்டு வெடிப்பில் சிக்கி 3 பேர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன் மேலும் 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த தீயணைப்பு வீரர்கள் கட்டிடத்தில் எரிந்த தீயை அணைத்து படுகாயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எனினும் அவர்களில் சிலரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரலாம் என அஞ்சப்படுகிறது.

## நைஜீரியாவில் தொலைக்காட்சி நிலையத்திற்கு தீ வைத்த வன்முறையாளர்கள்!

நைஜீரியாவின் லாகோஸ் நகரில் பொலிஸாரின் அத்துமீறல்களைக் கண்டித்து நடைபெற்ற போராட்டத்தில் தொலைக்காட்சி நிலையமொன்று தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.



இச்சம்பவத்தில்பாதுகாப்புபடையினர்நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் பலியானதுடன் 28 பேர் வரை காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஊரடங்கு என அமெரிக்கர்களை பூட்டிவைக்க முடியாது!

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. குறித்த தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மூன்று முறை நேருக்கு நேர் விவாதிப்பது அமெரிக்காவிலுள்ள மரபாகும்.

அந்தவகையில் இத் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ஜோய் பிடனும்(Joe Biden) அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் (Donald Trump) நாஷ்விலில் இறுதிக்கட்ட விவாதத்தை மேற்கொண்டிருந்தனர்.



இவ் விவாதத்தின் போது ட்ரம்ப் கொரோனாத் தொற்றைக் கையாண்ட விதம் குறித்து ஜோ பிடன் விமர்சிக்க, கொரோனாவை தாம் கொண்டு வரவில்லை என ட்ரம்ப் பதிலடி கொடுத்தார்.

மேலும் சீனாவிலிருந்து வந்த கொரோனாவால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதால் நாட்டை மீண்டும் திறக்கவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்ததையும் ட்ரம்ப் விளக்கினார். இதனையடுத்து பொதுமக்கள் வைரஸால் இறப்பதாக பைடன் கூறியதற்கு பதிலடி கொடுத்த ட்ரம்ப், அமெரிக்க மக்களை வீடுகளில் அடைக்க முடியாது எனவும் தெரிவித்திருந்தார்.

## ஆப்கானிஸ்தானில் சன நெரிசலில் சிக்கி 15 பேர் பலி!

ஆப்கானிஸ்தானிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் அருகே ஏற்பட்ட சன நெரிசலில் சிக்கி 15 பேர் பலியாகியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான ஆப்கானிஸ்தானியர்கள் மருத்துவ சிகிச்சை, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளுக்காக அண்டை நாடான பாகிஸ்தானுக்குச் செல்கின்றனர்.

இந்நிலையில், ஜலாலாபாத் நகரிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் விசாக்களுக்கு விண்ணப்பிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இதற்காக தூதரகத்திற்கு வெளியே உள்ள மைதானமொன்றில் 3000 க்கும் மேற்பட்டோர் திரண்டிருந்த நிலையில், அங்கு ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 11 பெண்கள் உட்பட 15 பேர் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



# ஆறுகள்



ஆறுகள் என்பது இயற்கையாக உருவான ஒரு நீரோடை ஆகும். பொதுவாக ஆறுகள் மலைப் பிரதேசங்களில் இருந்து உருவாகிறது. குளிர்பிரதேசங்களில் காணப்படும் மலைப்பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் உருகுவதால். தண்ணீரானது தாழ்வான பகுதிகள் நோக்கி செல்லும். அதேபோல். தட்பவெப்பநிலை கொண்ட மலைப்பகுதிகளில் அதிக அளவு மழை பெய்து அந்த நீரும் தாழ்வான பகுதி வழியாகச் சென்று கடலில் கலக்கும். மலைக்கும். கடலுக்கும் இடைப்பட்ட நீர் செல்லும் வழித்தடத்தையே நாம் ஆறுகள் என்று அழைக்கிறோம். இவை இயற்கையாகவே உருவாகியுள்ளது. இவற்றில் இருந்து செயற்கை ஆறுகளை உருவாக்கி பல பகுதிகளுக்கு தண்ணீரை கொண்டு செல்வதும் உண்டு. இவை துணை ஆறுகள். கால்வாய்கள் என அழைக்கப்படும். ஆறுகள் பொதுவாக தூய்மையான நீர் நிறைந்த பகுதியாகவே உள்ளது. ஆதிகாலம் முதலே ஆற்றுக்கரையில் மனிதனின் நாகரீகம் வளர்ந்துள்ளது.

1.நைல் நதி

ஆறுகளில் மிகப்பெரிய நீரோடை கொண்ட ஆறு நைல் நதி ஆகும். இது மிகப்பெரிய ஆற்று படுகையையும் கொண்டது. உலகின் மிக நீளமான ஆறுகளில் முதன்மையானது. 6650 கிமீ நீளம் (4132 miles ) கொண்ட மிக நீளமான ஆறு நைல் நதி ஆகும். இது ஆப்ரிக்காவின் வட கிழக்கு பகுதியில் உள்ளது. நைல் நதியானது வெள்ளை நைல் மற்றும் நீல நைல் என்ற இரண்டு துணை ஆறுகளை கொண்டுள்ளது. எகிப்து நாட்டின் பண்டைய கால குடி ஏற்றங்கள் நைல் நதிக் கரையில் அமைந்திருந்தன.

2. அமேசான் ஆறு

அமேசான் காடுகள் வழியாக பாய்கின்றன. உலகின் இரண்டாவது மிக நீளமான ஆறு ஆகும். தென் அமெரிக்காவில் உள்ளது. 6400 கி.மீ நீளம் கொண்ட மிகப்பெரிய ஆறு ஆகும். பரப்பளவில் உலகின் மிகப்பெரிய ஆற்று படுக்கை கொண்டது. உலகின் மிகப்பெரிய ஆறு என்ற சிறப்பு இதற்கு இருந்தாலும் நீளத்தில் நைல் நதியே மிக பெரியதாக உள்ளது. இது மழைக்காடுகள் என்று அழைக்கப்படுகிறது. உலகின் சுற்றுசூழலை பாதுகாப்பதில் பெரும்பங்கு வகிக்கிறது. இங்கு அனகொண்டா வகைப் பாம்புகள் மற்றும் டொல்பின் வகை மீன் இனங்கள் போன்ற அரியவகை உயிரினங்கள் இந்த ஆற்றில் வசிக்கின்றது. உலகிலுள்ள உயிரினங்களில் மூன்றில் ஒரு பங்கு இங்கு வாழ்வது குறிப்பிடத்தக்க ஒன்று.

3. யாங்சி ஆறு

யாங்சி ஆறுகள் உலகின் மூன்றாவது பெரிய ஆறு ஆகும். இது சீனாவில் உள்ள மிகப்பெரிய ஆறு. 6.300 கி.மீ நீளம் கொண்டது. சீன நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதியை வளப்படுத்துகிறது. இந்த ஆற்றுப் பகுதியில் ஏற்படக்கூடிய சுற்றுசூழல் மாசுபாடு காரணமாக அங்கு வசிக்கும் சீன முதலை. துடுப்பு மீன். கடல் பன்றி போன்ற இனங்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளன. கடல் மட்டத்தில் இருந்து 5170 மீ உயரமாக உள்ளது. ஆசிய கண்டத்தில் உள்ள ஆறுகளில் மிக நீளமான ஆறு இதுவாகும்.

4. மிசிசிப்பி ஆறு

6.275 கிமீ கொண்ட உலகின் நான்காவது பெரிய ஆறு ஆகும். இது வட அமெரிக்காவில் உள்ள நீண்ட பெரிய ஆறாகும். பல வளைவுகள் கொண்டதாக உள்ளது. மிசிசிப்பி என்ற பெயர் இதில் மிசி என்பதற்கு விசாலம். சிப்பி என்பதற்கு தண்ணீர் என்று பொருள். இந்திய வார்த்தைகளின் அடிப்படையில் இந்த பெயர் வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் கனடா போன்ற நாடுகளை வளப்படுத்துகிறது. இங்கு உயிரியல் பூங்கா மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் உள்ளது.

5. யெனீசீ ஆறு

யெனீசீ ஆறு. உலகின் ஐந்தாவது மிகப்பெரிய ஆறு ஆகும். 5549 கிமீ நீளம் கொண்ட ஆற்றுப்படுகை உடையது. பைகால் ஏரியில் இருந்து யெனீசீ ஆறு உற்பத்தி ஆகிறது. 55 வகையான மீன்களுக்கு இருப்பிடமாக உள்ளது.

6. மஞ்சள் ஆறு

மஞ்சள் ஆறு சீனாவில் பாய்கிறது. இது சீன நாட்டின் இரண்டாவது நீளமான ஆறாகும். இதனை அந்நாட்டின் துயரம் என்று அழைக்கப்படுகிறது. 5.464 கிமீ நீளமுடைய உலகின் ஆறாவது பெரிய ஆறு ஆகும். மஞ்சள் நதியின் ஆற்றுப்படுகையில் வண்டல் மண் படிவம் அதிகமாக இருப்பதால் மஞ்சள் நிறத்தில் இருக்கும். எனவே இது மஞ்சள் நதி என்று அழைக்கப்படுகிறது. 2007 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி மூன்றில் ஒரு பங்கு விவசாயம் மற்றும் தொழில்துறை பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த முடியாது. ஆலைகள் மற்றும் நகரத்தில் இருந்து வெளிவரும் கழிவுகளால் நீரானது மாசடைந்துள்ளது.

7. ஓப் ஆறு

உலகின் ஏழாவது மிகப்பெரிய ஆறு ஓப் ஆறு ஆகும். 5410 கிமீ நீளம் கொண்ட நீண்ட நதியாகும். சைபீரியா நாட்டில் உள்ள பெரிய ஆறு ஆகும். நதி முகத்துவாரத்தில் ஓப் ஆறு உலகின் மிக பெரியது ஆகும். விவசாயம் செய்வதற்கு. மீன் பிடிக்க. நீரில் இருந்து மின் உற்பத்தி போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

8. பரனா ஆறு

4850 கிமீ நீளம் கொண்ட உலகின் எட்டாவது பெரிய ஆறு பரனா ஆறு. தென் அமெரிக்காவில் உள்ள இரண்டாவது நீளமான நதி ஆகும். பரனா என்பதற்கு "கடலைப் போன்றது" என்று பொருள். இங்கு அணைகள் கட்டப்பட்டு நீர் மின்சாரம் எடுக்கப்படுகிறது. பிரேசில். பராகுவே மற்றும் அர்ஜென்டினா போன்ற நாடுகள் வழியாக பரனா ஆறு சென்று அந்நாட்டை வளமாக்குகிறது.

9. காங்கோ ஆறு

உலகின் ஒன்பதாவது மிகப்பெரிய ஆறு காங்கோ ஆறாகும். இதன் ஆற்றுப்படுகை 4700 கிமீ கொண்டதாகும். உலகில் உள்ள மிகப்பெரிய ஆறுகளில் அதிக ஆழம் கொண்ட ஆறு காங்கோ ஆறாகும். அதிக கனஅளவில் நீரைக் கொண்டு செல்லும் ஆறுகளில் இரண்டாவது இடத்தைக் கொண்டது. ஆப்ரிக்காவில் பாயும் முக்கிய ஆறாக விளங்குகிறது. காங்கோ பேரரசு காலத்தில் இந்த நதிக்கு காங்கோ ஆறு என்ற பெயர் உருவானது.

10. அமுர் ஆறு

உலகின் பத்தாவது மிகப்பெரிய ஆறு அமுர் ஆறாகும். 4444 கிமீ நீளம் கொண்ட பெரிய ஆறாகும். கருப்பு ட்ராகன் என்று சீன மொழியில் அழைக்கப்படுகிறது. சீனா மற்றும் ரஷ்யாவின் எல்லைப் பகுதியில் பாய்கிறது.

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 25.10.2020 அன்று வெளியிடப்பட்டது.